18வது அகவையில் 2014ற்கான
தரம் 1-11 வரையான
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
ஆரம்பம் 03.01.2014
குணா கல்வி நிலையம்
இல 213, நீதிமன்ற வீதி,
திருகோணமலை
T.P 0777034908

அறைவு 02 இயம் 19 December 21-27, 2013

# மலைமுரசு
MALAIMURASU
வார இதழ்
உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை : 30.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்

# கிழக்கிற்கோர் சிவிலியன் ஆளுனர்

## “இறந்த அனைவரையும் நினைவுகூறப் பொதுவான ஒரு தினம்”



## அபிவிருத்திப் பொருளல்ல மனிதன்

### கத்தோலிக்கத் திருச்சபையின் வேண்டுகோள்

போரின் பின்னர் போதுமான காலங்களைக் கடந்தாகி விட்டது. இனியாவது அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன்னெடுத்து போரினால் அழிவடைந்துள்ள மக்களின் இயல்பு வாழ்வை மீட்டெடுக்க விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அஃதிலாவிடில் சகஇனத்தவருடனான உறவுகள் மேம்பட வழிபிறக்கப் போவதில்லை.

எனவே எடுக்கப்பட வேண்டிய பல நடவடிக்கைகளில் முதலாவது நடவடிக்கையாக நாம் வேண்டுவது கிழக்கிற்கும், வடக்கிற்கும் சிவிலியன் ஒருவரை ஆளுனராக நியமிக்க வேண்டும் என்பதே என கத்தோலிக்க ஆயர்கள் சங்கம் 22 பக்கக் கடிதம் மூலம் அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையில்

### நாலந்த கொலை வழக்கில்
## சுசந்த விடுதலை

நாளந்த எல்லாவெல கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பிரதிப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளார். 1997ம் ஆண்டு ...... 13



## “தாக்குதல்” வன்முறையின் உச்சம்

### சனநாயகத்திற்கான சட்டவாளர் சங்கம்

காணாமற் போனோரைக் கேட்டழுத தாய்மாரையும் பொதுமக்களையும் தாக்கியது வன்முறையின் உச்சம் என சனநாயகத்திற்கான இலங்கைச் சட்டவாளர் அமைப்பு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளால் பிரகடனப்படுத்தப்பட்டு உலகலாவிய அடிப்படையில் டிசம்பர் 10ம் திகதி உலக மனித உரிமைகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. அன்றைய தினம் திருகோணமலைப் பொதுப் பேருந்து நிலையத்திற்கு முன்பாகக் கூடிய மக்கள் காணாமற்போன உறவுகளைத் தேடித்தருமாறு....... 13



## “ஏனெனில் கிறிஸ்துவின் செய்தி எல்லா மக்களுக்குமானதே”

### கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் அதி. வண. ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை



“இந் நாட்களில் நாங்கள் கிறிஸ்மஸ் விழாவை மிகவும் மகிழ்ச்சிக்குரிய விழாவாக நிகழ்த்தி வருகின்றோம். அவ்விழா மதங்களைத்தாண்டி அனைத்து மக்களாலும் மகிழ்ச்சியாகக் கொண்டாடப்படுவதை காண்கின்றோம். இவ்வாறு மதங்களைத் தாண்டி மனிதர்கள் அனைவராலும் கொண்டாடப்படும் பாலனின் பிறப்பின் ஊடாகக நாம் கண்டு கொள்வது யாதெனில் கிறிஸ்துவின் செய்தி எல்லா மக்களுக்கும் உரியது என்பதே” என தனது கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியினை அதி.வணக்கத்திற்குரிய திருமலை மறை மாவட்ட ஆயர் கலாநிதி. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தார். பாலன் பிறப்பின் விழாவின் அர்த்த்தைப் பார்த்தோமானால் இயேசு அவதரிப்பதற்கு முன்னரே அவதரித்த தேவ தூதர்களால் செய்தியொன்று விடுக்கப்பட்டது “இதோ உங்களுக்கு மகிழ்ச்சியூட்டும் ஓர் நற்செய்தியை அறிவிக்கின்றோம்- உங்களுக்கு ஒரு மகன் பிறப்பார்” எனத் தீர்க்க தரிசனமாகக் குறிப்பிட்டப்பட்டது. அதன் பின்னரே இயேசுவின்

## இந்தியக் கடற்கலங்கள் திருமலையில்



இந்தியக் கரையோரக் காவற் கடற்படையின் இரண்டு கடற்கலங்கள் திருகோணமலைத் துறைமுகத்தை 18ம் திகதி வந்தடைந்துள்ளன. ஆழ்கடல் மற்றும் கரையோரப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த விஸ்வாஸ்ட், ராஜ்கமல் ஆகிய இரு கடற்கலங்களையும் முறையே காவல்மா அதிபர் ஜே.கே. வர்கீஸ் மற்றும் கட்டளை அதிகாரி எச்.ஜே. சிங் ஆகியோர் தலைமை தாங்கி வந்துள்ளனர். அலுவலர்கள் மற்றும் கடலோடிகள் உட்பட இக் கப்பல்களில் வருகை தந்த 144 இந்தியக் கடற்படையினர் இலங்கை மற்றும் மாலைதீவுக் கடற்படையினருடன் சேர்ந்து மும்முனைப் பயிற்சிகளில் ஈடுபடவுள்ளதாக இலங்கைக் கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



### கிழக்கில் த.தே.கூவின் முதலாவது தோல்வி
## காரைதீவுப் பாதீடு தோல்வி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சி அதிகாரத்தின் கீழிருக்கின்ற காரைதீவு பிரதேச சபையின் வரவு-செலவுத்திட்டம் 3 மேலதிக வாக்குகளால் இன்று புதன்கிழமை தோற்கடிக்கப்பட்டுள்ளது.

காரைதீவு பிரதேச சபையின் இவ்வாண்டுக்கான இறுதியமர்வு தவிசாளர் தலைமையில் கடந்த புதன்கிழமை கூடியது. இதன்போது தவிசாளரினால் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்....
திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. 13

## கிழக்கு முதல்வரின் சிங்களப் பணிப்புரை



கிழக்கு மாகாண முதலமைச்சர் சிங்கள மொழி மூலம் பணிப்புரை வழங்கியிருப்பது சிறுபான்மை இனத்தின் மொழிக் கொள்கையை மீறும் செயலாகும் என இலங்கை ஆசிரியர் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது. 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு
MALAIMURASU

159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042 fax: 026 2223071


## வணக்கம்
### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் மீதான தடையும்

கடந்த வாரம் பாராளுமன்றில் ஓங்கி ஒலித்தன இருவாதங்கள். அவை முறையே இராவணேசன் ஒரு தமிழ் மன்னனா? இல்லையா என்பதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடைசெய்ய வேண்டும் என்பதுமே அவை.

இராவணேசன் தமிழ் மன்னன் இல்லை என்பதை யாரும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடைசெய்ய வேண்டும் என்ற குரல் பல விடயங்களை எமக்குச் சொல்லித்தருகின்றது.

தமிழத் தேசியக் கூட்டமைப்பு என்பது என்ன? என்பதைப் புரிந்திருந்தும் கூட பேரினவாதக்குரல் ஓய்தபாடில்லை.

தமிழத் தேசியக் கூட்டமைப்பு என்பது ஒரு அரசியல் கட்சிக்கும் அப்பால் ஒரு இனத்தின் விடுதலைக்கான அமைப்பாக மாற்றம் பெற்றுவிட்டமை 2009ன் பின்னர் நிகழ்ந்துவிட்டது.

இனத்தின் விடுதலை என்பதைத் தப்பார்ப்பிதமாக நாட்டைக் கூறுபோடுதல் எனப் பேச முற்படுதல் பூகோளமயமாகியுள்ள உலக நிலையில் ஓர் பத்தாம் பசலித்தனம் என்பதை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

பல இன, மதஇ பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட இனக் குழுமங்களை ஒரே நில எல்லைக்குள் கொண்டு வந்து ஆட்சியமைக்க முற்படும் போது அவ்வவ் இனத்தின் பண்பாட்டுக் கூறுகள் எவற்றிற்கும் பாதிப்பை ஏற்படுத்தாமல் ஆட்சியமைக்கும் சமஸ்டி ஆட்சி முறை இன்று உலகிற் பல நாடுகளில் நடைபெறுகின்றது. அங்கெல்லாம் அவ்வவ் இனங்கள் தமது விடுதலையை நுகர்ந்து வருகின்றனரே யொழிய நாட்டைத் துண்டாடவில்லை.

இலங்கைத் தீவில் ஆங்கிலேய ஆட்சியின் பின் ஒன்றாக்கப்பட்ட இரு இனக் குழுமங்களில் ஒரு குழுமம் மற்றைய இனக் குழுமத்தின் பண்பாட்டடையாளங்களைச் சிதைக்க முற்படுவதால்தான் இன விடுதலையை வேண்டி நிற்கின்றது தமிழ் இனம்.

அவ் விடுதலையை முன்னெடுக்கும் பணியைச் செய்யும் முன்னணியாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று செயற்பட்டு வருகின்றது. அவ்வமைப்பின் பின்னணியில் அனைத்து ஈழத் தமிழரும் திரண்டுள்ளனர் என்பதை கடந்த காலத் தேர்தல்கள் யாவும் பறைசாற்றி நிற்கின்றன. அதனை உலகமும் உணர்ந்துள்ளது.

இந்நிலையில் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் மீதான தடை அனைத்துத் தமிழ்மக்களின் மீதான தடையே என்பதைப் பேரினவாதம் பேசும் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். உணராவிட்டால் என்ன? அனைத்துத் தடைகளையும் யாரும் மீண்டும் உடைக்க முற்படலாம்.....

## வில்கம்வெகர வாவிப் புனருத்தாரன வாகனங்கள் தீக்கிரை

திருகோணமலை, உப்புவெளி பிரதேசத்திலுள்ள வரலாற்றுப் பிரசித்தி மிக்க வில்கம்வெஹர வாவியை புனர்நிர்மாணம் செய்வதற்காக எடுத்துவரப்பட்ட எஸ்கவேட்டர் ரக வாகனங்கள் இரண்டு மற்றும் டிப்பர் ரக வாகனமொன்று ஆகிய முன்று வாகனங்களும் இனந்தெரியாதோரினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இதனால், 95 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக உப்புவெளி காவல்துறை தெரிவித்தனர். எழுவர் அடங்கிய இனந்தெரியாத குழுவினரே மேற்படி வாகனங்களை தீக்கிரையாக்கியுள்ளனர் என்று காவல்துறை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

காவல்துறை மற்றும் கடற்படையினரும் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த போதும் அது பயனளிக்காத நிலையில் வாகனங்கள் மூன்றும் முற்றாக சேதமடைந்துள்ளன.

சம்பவம் தொடர்பில் உப்புவெளி காவல்துறை தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

## மாகாணசபை உறுப்பினர்களின் உதவிகள் மக்களுக்கு...

தோப்பூர் பிரதேச மீனவர்களுக்கான தோணிகள் மற்றும் மீன்பிடி வலைகள் உரிய சங்கங்களிடம் கையளிக்கும் நிகழ்வு 2013.12.13 ம் திகதி தோப்பூர் பிரதேச கட்சி காரியாலயத்தில் வைத்து கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அன்வரால் கிழக்கு மாகாண விவசாய மற்றும் நன்னீர் மீன்பிடி அமச்சர் ஹாபீஸ் நஸீரிடம் வேண்டியதற்கிணங்க கையளிக்கப்பட்டன. அத்துடன் மா.சபை.உறுப்பினர் அன்வரின் 2013ம் ஆண்டுக்கான பண்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து பிரதேசத்திலுள்ள வறியவர்களுக்கு வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் நோக்கில் துவிச்சக்கரவண்டிகளும் கையளிக்கப்பட்டன





கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தன் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் திருகோணமலை பன்குளம் (மொறவெவ) பிரதேச செயலாளர் பிரிவின் சாந்திபுரம் விவசாய சங்கத்திற்கு விவசாய உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு கடந்த 14.12.2013 சனிக்கிழமை சாந்திபுரம் கிராம சங்க கூட்டத்தில் இடம் பெற்றது.





## வீதி அபிவிருத்திக்காக தனது வீட்டை உடைத்த பிரதேசசபைத் தலைவர்

அபிவிருத்தி செய்யப்படவுள்ள மூதூர் தபால் அலுவலகம் தொடக்கம் சந்தை வீதி அரபிக்கல்லூரி ஊடாக பெரிய பாலம் வரையிலான வீதியினை அகலப்படுத்தி இரு பக்க வடிகானுடன் கம்பள வீதியாக்குதல் நடைபெற வுள்ளது. பிரதேச சபையினால் குறித்த வீதியினை அகலப்படுத்தும் போது இரு பக்கமும் காணப்பட்ட வீடுகள், கடைகள், மற்றும் மதில்கள் வேறு நிர்மானங்கள் மரங்கள் மின் மற்றும் தொலைத் தொடர்பு கம்பங்கள் போன்றவற்றை அகற்றி வேலைத்திட்டம் சிறப்பாக நடைபெற உதவுமாறு உரிய அதிகாரிகள் உரிமையாளர் மற்றும் ஏனையோர்களை பிரதேச சபை வேண்டிக் கொண்டதற்கு அமைவாக முதலாவதாக மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.ஹாரிஸ் தனக்கு சொந்தமான அரபிக் கல்லூரி வீதியில் உள்ள வீட்டினை உடைத்து அப்புறப்படுத்துவதனை படத்தில் காணலாம்





## சம்மாந்துறை பிரதேசசபையின் ஊழியர் ஒன்றுகூடல்

(எம.ரீ.எம்.பர்ஹான்)

சம்மாந்துறை பிரதேசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் சிற்றூழியர்களுக்கான வருடாந்த ஒன்று கூடல் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.எம்.நௌஷாட் தலைமையில் சம்மாந்துறை ஜனாதிபதி விளையாட்டு கட்டிடத்தொகுதியில் 2013.12.16ம் அன்று இடம்பெற்றது.

இன் நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் சிற்றூழியர்கள் குடும்ப சகீதம் கலந்து கொண்டனர். இங்கு விளையாட்டு நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப் பட்டிருந்ததோடு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டது.

பிரதேச சபை ஊழியர்களது பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.





## "பயனுள்ள முதுமை" போட்டிப் பெறுபேறுகள் அறிவிப்பு

உலக உளநலத் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு சர்வதேச உளவியல் கற்கை நிலையம் ''பயனுள்ள முதுமை'' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டி ஒன்றினை வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை சிரேட்ட உளநல வைத்தியர் வைத்திய கலாநிதி பா.யூடிரமேஸ் ஜெயக்குமார் அவர்களின் மேற்பார்வையில் நடாத்தியது.

இப்போட்டியில் பிள்ளையாரடியைச் சேர்ந்த இ.அகிரதன் முதலாமிடத்தையும் கள்ளியங்காட்டைச் சேர்ந்த வி.சிறிகாந்தன் இரண்டாமிடத்தையும் சித்தாண்டியைச் சேர்ந்த சா.பரமேஸ்வரி மூன்றாமிடத்தையும ்பெற்றுக் கொண்டனர் இவர்களுக்கான சான்றிதழ்களும ்பரிசில்களும் வழங்கப் படவுள்ளதாக மேற்படி கற்கை நிலையப் பணிப்பாளர் திருமதி.தேவரஞ்சினி பிரான்சிஸ் தெரிவித்தார். (சச்சு)

## கிளிவெட்டி கிராமசேவையாளரின் அலுவலகம் எரித்து அழிப்பு

கிளிவெட்டி இடைத்தங்கல் முகாமிலுள்ள கிராம சேவையாளரின் அலுவலகம் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திரு. சதீஸ் என்ற கிராம சேவையாளரின் அலுவலகமே இவ்வாறு எரிக்கப்பட்டுள்ளதாகக் காவல்துறையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதிருப்தியடைந்த மக்களே இவ்வாறு செய்திருக்க வேண்டும் என முறைப்பாட்டில் தெரிவிவிக்கப் பட்டுள்ளதாக நம்பகமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக் கிராமசேவையாளர் கிளிவெட்டி இடைத்தங்கல் முகாம் உட்பட கிளிவெட்டிப் பிரதேசத்திற்கும், அதற்கும் மேலாக மேன்காமம் கிராமத்திற்கும் பொறுப்பாகச் செயற்பட்டு வந்துள்ளார். இவரது பிறப்பிடம் கிளிவெட்டி என்பதும் அவ்விடத்திலேயே இவரது அலுவலகம் எரித்து நாசமாக்கப் பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவாவை நோக்கிய இராசதந்திர நகர்வுகள்

மனித உரிமைச் சபையின் கூட்டத்தொடரைக் கருத்திற் கொண்டு அரசு பெரும் எடுப்பிலான இராசதந்திர நகர்வுகளை முன்னெடுத்துள்ளது. அதற்குக் கட்டியம் கூறுமாற்போல பாதுகாப்புப் படைகளால் தயாரிக்கப்பட்ட எட்டு சலனப்படங்கள் (வீடியோ) உலகெங்கும் உள்ள இலங்கைத் தூதுவராலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தி நடவடிக்கைகள் எவ்வாறு அந்தளவிற்கு நிகழ்ந்துள்ளன என கொழும்பிலுள்ள வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு தொடர்ந்து விளக்கமளிக்கப்பட்டு வருகின்றது.

**Sunday LEADER**

## "ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தோல்விக்கான காரணங்கள் ஆராயப்படுகின்றன"

உள்ளூராட்சி சபைகள் பலவற்றில் 2014ம் ஆண்டுக்கென முன்மொழியப்பட்ட வரவு செலவுத்திட்டங்கள் ஏன் தோற்கடிக்கப்பட்டன என்பதை ஆராயும் நடவடிக்கைகளை சனாதிபதி செயலகம் முன்னெடுத்துள்ளது. இவ்வாறான நிலைமை ஐ.ம.சு முன்னணிக்கு எழுந்ததற்கு தேசிய மட்டத்தில் செயற்படும் அக் கட்சியின் சில அரசியல் தலைவர்களே பொறுப்பு எனவும் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

**Sunday LEADER**

## மேல்மாகாண சபை தலைமை வேட்பாளர் யார்?

எதிர்வரும் மேல்மாகாணசபை தேர்தலில் தனது தலைமை வேட்பாளர் யார்? எனத் தற்போதுவரை தீர்மானிக்க வில்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

**Sunday LEADER**

## இலங்கையிலும் "மரிஜுவானா" உற்பத்திக்கு முயற்சி

இலங்கையில் மரிஜுவானா விற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக் கோரும் சட்டமூலமொன்றை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப் போவதாக சுதேச வைத்தியத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.
ஆயுர்வேத வைத்தியத்தில் ஓர் மருந்துப் பொருளாகக் காணப்படும் மரிஜுவானா ஓர் போதைப் பொருளாகவும் இருப்பதாலேயே இலங்கையில் தடைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

**Sunday LEADER**

## "ஹிருணிகா" எதிர்பார்க்கும் முதலமைச்சர் பதவி

சுட்டுக் கொல்லப்பட்ட சனாதிபதி ஆலோசகர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்ர வின் மகள் ஹிருணிகா, மேல் மாகாணசபையின் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட விருப்பம் கொண்டுள்ளார். அதனை சனாதிப தியிடம் தெரிவிக்கும் பொருட்டு ஹிருணிகாவும் அவரது தாயாரும் சனாதிபதியைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

**Sunday LEADER**

## "கொழும்பு மாநகரசபை ஆணையாளரின் அதிகாரங்கள் குறைக்கப் படும்"

உள்ளக விசாரணைகள் மற்றும் உள்ளக இடமாற்றங்களில் தனது அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதால் கொழும்ப மாநகர ஆணையாளரின் அதிகாரங்களை குறைக்கப் போவதாக கொழும்பு மாநகரசபை பிரதி மேயர் தெரிவித்துள்ளார்.

**Sunday LEADER**

## சொத்துவரி அதிகரிப்பு

உள்ளூராட்சி சபைகளுக்குட்பட்ட சொத்துக்களுக்கான வரியை அதிகரிப் பதன் ஊடாக உள்ளூராட்சி சபைகளின் வருமானத்தை அதிகரிக்க அரசு உத்தேசித்துள்ளது. "வருடாந்தப் பெறுமதி" என்ற அடிப்படையிலேயே தற்போது உள்ளூராட்சி சபைகளால் சொத்துக்களின் மூலதனப் பெறுமதிக்கு ஏற்ப வரி அறவிடும் திட்டத்தை உள்ளூ ராட்சி அமைச்சர் அதரவுல்ல மந்திர சபைக்கு முன்மொழிந்துள்ளார். 1946ம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்ட வரித்திட்டத்திற்கு அமை யவே மோட்டுவரி அறவிடப்பட்டுவதாக தெரிவித்த அமைச்சர் அவ் வரித்திட்டம் இன்றுவரை வர்த்தமாணியிடப்படா ததால் அவ் வரித்திட்டத்தின் சட்ட நிலை ப்பாடு கேள்விக்குள்ளாகியுள்ளதாக தெரிவித்தார்.

**Sunday TIMES**

## சொகுசுக் கார்களைக் கம்பனிக்கு வழங்கினால் நடவடிக்கை - ஜே.வி.பி

பொதுநலவாயத் தலைவர்க ளின் பாவனைக்கு எனத் தருவிக்கப்பட்ட சொகுசு வாகனங்களை மீண்டும் உரிய கம்பனியிடம் திருப்பிக் கொடுத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.
54 பென்ஸ் கார்களை திருப்பிக் கொடுக்கும் முடிவை அரசு எடுத்துள்ளது என்ற தகவல் வெளியான நிலையிலேயே ஜே.வி.பி இவ்வாறு அறிக்கையிட்டுள்ளது. இக்கார்களை வரியின்றிக் கொள்வனவு செய்துள்ள இலங்கையின் நிதியமைச்சானது அக்கார்களைக் கொள்வனவு செய்வதற்கான முழுச் செலவையும் ஏற்கனவே செலுத்தியுள்ளது. இந்நிலையில் கார்களைத் திரும்பவும் கம்பனிக்கு ஏன் வழங்க வேண்டும் எனக் கேள்வி எழுப்பியுள்ள ஜே.வி.பி அக் கார்களைப் பகிரங்க ஏலத்தில் விற்க வேண்டும் எனவும் கோரியுள்ளது.

**Sunday LEADER**

## முடிவுத் திகதி நீடிப்பு

காணாமற் போனோர் தொடர் பாக விசாரிக்கும் ஆணைக்குழுவிற்குத் தகவல்வழங்கும் காலத்தை அரசு நீடித்து ள்ளது. வடக்குக் கிழக்கில் நிலவிய அசாதாரன சூழ்நிலைகளின் போது காணாமற் போனோர் தொடர்பாக தகவல் திரட்டும் மற்றும் விசாரணை செய்யும் ஆணைக்குழுவிற்கு எதிர்வரும் 31ம் திகதிவரை தகவல்களை வழங்க முடியும் என தெரிகின்றது.

**Sunday LEADER**

## கென்யாவுடன் நல்லுறவு

"சுமார் 3 தசாப்தகாலமாக பிரிவினைவாதத்தால் அழிவுற்றிருந்த நாட்டை இன்று ஒன்றாக்கி நிலையான பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நாம் நகர்ந்து கொண்டிருக்கிறோம். அதனைப் பலருடனும் பகிர்ந்துகொள் ளும் நிலையை அடைந்துள்ளோம்" என சனாதிபதி தெரிவித்துள்ளார்.

கென்யாவிற்கு பயணம் மேற் கொண்டு அந் நாட்டுடன் பலமான உறவை வளர்த்துக் கொள்ள அடித்தளம் இட்டுள்ள சனாதிபதி அங்கு உரை யாற்றும் போதே இவ்வாறு தெரிவித் துள்ளார்.

**Sunday LEADER**

## "சுவிங்கத்தில் தக்காளி சோஸ்"

சுவிங்கத்தை உற்பத்தி செய்யும் நிலையமொன்றின் நான்கு மாடிக் கட்டிட மொன்றில் பெருமளவு நிறை கொண்ட "தக்காளி சோஸ்" கைப்பற்றப் பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அறிவித்துள்ளது.

சுவிங்கத்தில் தக்காளிப் பழ சோஸைக் கலந்து உற்பத்தி செய்வதால் கடுமையான உடல்நலக் குறைபாடுகள் ஏற்படும் சாத்தியக் கூறுகள் இருப்பதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.

**Sunday LEADER**

## நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் இலாபம் 380 மில்லியன்

2013ம் ஆண்டில் நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் இலாபம் 380 மில்லியன் ரூபாய் ஆகும். பல நூற்றுக்கணக்கான புதிய இணைப்பு க்கள் ஊடாகவே இவ்வளவு இலாபத்தை உழைக்கக் கூடியதாக இருந்ததாக தெரிவித்த சபை 2020ம் ஆண்டில் சுமார் நாலு மில்லியன் நீர் இணைப்புக்கள் என்னும் நிலையை எட்ட உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

**Sunday LEADER**

## மனித உரிமைச் சட்டத் திருத்தங்கள்

இலங்கை மனித உரிமைச் சபையானது அதனது பழைய சட்டங்கள் பலவற்றை மாற்றிப் புதிய சட்டங்கள் பலவற்றை அறிமுகஞ் செய்யும் முனைப்பில் உள்ளது. இச் சட்ட மாற்றங்கள் ஏற்றுச் கொள்ளப்படுமாயின் மனித உரிமைச் சபை கூடியளவு சட்டத்திறன் வாய்ந் ததாக மாற்றப்படும் எனத் தெரிகின்றது.

**Sunday LEADER**

# சிந்திக்க சில துளிகள்

எகிப்த்தை ஆண்டுகொண்டிருந்த அரசனிடம், மிகப் பெரும் உணவுத் தட்டுப் பாடு வர உள்ளது எனக் கூறினார்கள். அரசனும் உணவுத் தட்டுப்பாட்டை நீக்க என்ன செய்யலாம் எனக் கேட்டான். அதற்கு அவர்கள் "இயலுமான அளவு உணவை இப்பொழுதே சேமித்துக் கொள்ளுங்கள்" என கூறினார்கள்.
அரசனும் அது போன்றே கோதுமை போன்ற உணவு வகைகளை சேமிக்க ஆரம்பித்தான். பின்னர் வறுமை மற்றும் பஞ்சம் வந்த பொழுது ஒருவரும் பெரிதாக கஷ்டப்படத் தேவையில்லாமல் இருந்தது. ஏனெனில் உணவு வகைகள் எல்லோரிடமும் இருந்தன. அதுபோலவே மனிதனும் நல்ல நேரம் நடைபெறும் பொழுது சேமித்து வைத்தால், ஆனந்தம் தெளிவு என்பவற்றை சேமித்து வைத்தால், கெடுதலான நேரம் வந்தாலும் அது கெடுதலான நேரமாக இருக்காது.
கபீர் என்ற ஞானி "இன்பத்திலே இறைவனை நினைப்பவர் இல்லை. துன்பத் திலே தான் இறைவனை எண்ணுவார்கள், இன்பத்திலே இறைவனை வணங்கியி ருந்தால், துன்பம் எவ்வாறு வந்து சேரும்? " என கூறினார். எல்லாம் நன்றாக இருக்கும் பொழுது மனிதன் கடவுளைப் பற்றி எண்ணுவதில்லை. அப்பொழுது நான் எவ்வளவு பெரிய பலசாலி என்று கூறுகின் றான். நான் இதனை செய்திருக்கிறேன். நான் அதனை செய்திருக்கிறேன். என்னிடம் இந்த பொருட்கள் உள்ளன. வியாபாரம் எல்லாம் உள்ளன. தன்னிடம் உள்ள மன விருப்பங்களை பூர்த்தி செய்துவிட்டு, இவை எல்லாம் எனது திறமை, எனது பலம் என கூறுகின்றான்.

இந்த மூச்சு வந்து போகும் வரை நீங்கள் உயிருடன் இருப்பீர்கள். இந்த மூச்சு வந்து போகும் வரை உங்களிடம் எல்லாமே உள்ளன. மனிதன் தனது வாழ் விலே என்ன செய்தாலும், காலையிலிருந்து மாலைவரை என்ன செய்தாலும், இதன் விளைவு என்ன என எண்ணிப் பார்க்கிறா னா? காலையிலிருந்து மாலைவரை நாம் பேசும் விடயங்களைப் பேசுவதற்கு முன்னர், இதன் விளைவு எப்படி அமையும் என எண்ணி பார்க்கிறோமா? நமது நண்பர் கள் உறவினர்கள் கூறுகின்ற விடயங் களை கேட்கின்றோம். கேட்கும் பொழுது அதன் விளைவு என்ன என எண்ணுகி றோமா? இவ்வாறு நாம் செய்யும் விடயங் களை புரிந்துகொள்ளாமல் செய்யும் பொழுது, அதன் விளைவு நல்லதாகவும் இருக்கலாம், கெடுதலாகவும் இருக்கலாம்.

இது எவ்வாறு என்றால், ஒருவர் காரை ஓட்டிக்கொண்டு இருக்கிறார். அவர் ஸ்டெயரிங்கில் இருந்து கையை எடுத்தால், உடனடியாக விபத்து ஏற்படும் என்று இல்லை. சிறிது தூரம் கார் ஓடும். பின்னர் எப்பொழுது என்ன நடக்கும் என்று ஒருவருக்கும் தெரியாது. நமக்கும் இது தான் நடைபெறுகிறது. இந்த உலகத்தின் ஓட்டத்திற்கு விட்டுவிடும் பொழுது, அது எதனுடைய கட்டுப்பாட்டிலே இருக்கும்? ஒழுங்காக படகை கட்டாவிட்டால், அந்த படகிற்கு என்ன நடக்கும்? கயிறு அறுபட்டால் பட்டத்தின் நிலை எப்படி இருக்கும்? காற்று இருக்கும் பொழுது, யாரோ ஒருவர் கயிற்றை பிடித்திருப்பதால் தான் பட்டம் பறக்கிறது. கயிறு அறுந்து விட்டால், பட்டம் கீழே விழத்தான் வேண்டும்.

நாமும் நமது வாழ்வை அறிந்து, புரிந்து, யோசித்து, உணர்வுடன் வாழ்ந் தோமாயின் அதனுடைய விளைவு மிகவும் நல்லதாக அமையும். மக்கள் கெடுதலில் இருந்து தப்பித்து வாழ விரும்புகிறார்கள். கெடுதல் எங்கிருந்து வருகிறது? வேற்று கிரகத்தில் இருந்து கெடுதல் வந்து மனிதனை ஆட்டிப்படைக்கிறதா?
நல்லது என்றால் என்ன? கெடு தல் என்றால் என்ன? யார் ஒருவன், இந்த மூச்சு வந்து போகும் வரை எல்லாம் நல்லது என்பதை புரிந்து கொள்கிறானோ, அவனுக்கு கெடுதல் எவ்வாறு ஏற்படும்? எனவேதான் "நினைப்பதென்றால் இறைவன் நாமத்தை எண்ணுங்கள். இறை வன் நாமம் அன்றி மற்றய யோசனைகள் எல்லாம் காலன் உங்களது கழுத்தில் போடும் தூக்கு கயிறு" என கூறப்பட்டு ள்ளது.

உங்களது வாழ்விலே எது முக்கியமானது என்பதை கவனித்துக் கொள்ளுங்கள். ஒரு வாழ்க்கைதான் கிடைத்துள்ளது. மீண்டும் பிறப்போம் என மக்கள் கூறுகிறார்கள். ஆனால் ஞானிகளும் மகான்களும் "மனித உடல் மீண்டும், மீண்டும் கிடைக்காது" எனக் கூறியுள்ளார்கள். "மனித வாழ்க்கை விலை மதிக்க முடியாதது. மீண்டும் மீண்டும் கிடைக்காது. அதனை மண்ணா க்கி விடாதீர்கள். இப்பொழுது கிடைத்து ள்ளது, இனி ஒரு பொழுதும் கிடைக்காது" என ஒரு பாடலே உள்ளது.

ஆனால் நம்மிடம் ஆயிரம் சாட்டுப் போக்குகள் உள்ளன. நமக்குப் பொறுப் புகள் உள்ளன என கூறுவோம். வால்மீகி யின் கதை ஒன்று உள்ளது. அவர் நாரதரி டம் கொள்ளையடிக்க முயன்ற பொழுது "நீ செய்யும் இந்த தொழிலிலே கிடைக் கும் பொருளைக் கொண்டு குடும்பம் நடத்துகிறாயே! உனது குடும்பத்தார் உனக்கு கிடைக்கும் பாவத்திலும் பங்கு பெறுவார்களா?" என நாரதர் கேட்டார். வால்மீகியும் தனது குடும்பத்தாரிடம் கேட்ட பொழுது ஒருவரும் பாவத்தில் பங்கெடுக்க சம்மதம் தெரிவிக்கவில்லை. இந்த கதையின் அர்த்தம் என்னவென்றால், நீங்கள் இந்த உலகத்திற்காக நேரத்தை செலவு செய்கிறீர்களே! கடைசி நேரம் வரும் பொழுது உங்களது நேரத்தை திரும்பக் கொடுக்க அவர்கள் வருவார்களா? அனால் அவர்கள் உங்களுக்கு தமது நேரத்தை கொடுக்க முடியாது. உங்களது வீட்டை சேற்றின் மேல் கட்டாதீர்கள். வீட்டின் அத்திவாரம் உறுதியாக இருக்க வேண்டும். மக்கள் வீட்டை கட்டுவார்கள், ஆனால் அத்திவாரம் உறுதியாக இல்லை என்றால், வீடு நிலையாக நிற்காது. நல்ல நேரம் நடைபெறும் பொழுது சேமித்து வைத்துக் கொள்ளுங்கள். நேரம் கெடுதலாக அமையும் பொழுது, நாம் துன்பப்பட வேண்டிய அவசியம் இருக்காது.

**பிரேம் ராவாட்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகாசி வருகையின் மர்மங்கள்



இலங்கையில் புனர்வாழ்வு, புனரமைப்பு, அமைதியைக் கட்டியழுப்புவதற்கான ஜப்பானிய அரசின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி அண்மையில் தனது 23வது இலங்கைப் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

விடுதலைப் புலிகளுக்கும், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கும் இடையில், நோர்வேயின் ஏற்பாட்டில் சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த 2002ம் ஆண்டு காலப் பகுதியில் தான், அகாசி முதல்முறையாக இலங்கை மக்களுக்கு அறிமுகமானார்.

அதற்கு முன்னர், ஐ.நாவில் உயர் பதவியை வகித்து வந்த ஜப்பானின் மூத்த இராஜதந்திரியான அகாசி, ஆரம்பத்தில் இலங்கைக்கான ஜப்பானின் சிறப்பு சமாதானத் தூதுவராகவே நியமிக்கப்பட்டார்.

அவர் முதன் முதலாக, புலிகளைச் சந்திக்க கிளிநொச்சிக்குச் சென்ற போது, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனே, நேரில் சந்தித்துப் பேசி, அவருக்கு புலிச்சின்னம் பதித்த நினைவுப் பரிசு ஒன்றையும் வழங்கினார்.

அந்தக் காலகட்டத்தில், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், தெரிவு செய்யப்பட்ட ஒரு சில வெளிநாட்டுப் பிரமுகர்களை மட்டும் சந்தித்திருந்தார். அவர்களுக்குள் அகாசிக்கு புலிகள் கூடிய முக்கியத்துவத்தை அளித்தனர்.

ஆனால் காலப்போக்கில் அகாசி யும் அடிக்கடி இலங்கைக்கு வரத் தொடங்கினார்.

நித்தம் போனால் முற்றம் சலிக்கும் என்பது போல, அவரது சமாதான முயற்சிகளிலும் சலிப்புகள் தோன்றத் தொடங்கின.

இதனால், ஒருகட்டத்தில் அகாசியின் வருகையில் புலிகளும் ஊடகங்களும், இலங்கை மக்களும் அக்கறை காட்டுவதைக் குறைத்துக் கொள்ளத் தொடங்கினர்.

அவ்வப்போது அவர் வருவதும், அரசதரப்புடனும், பிறதரப்புகளுடனும் பேச்சு நடத்துவதும் அவரது வழக்கமாயிற்று.

ஆனால், அகாசிக்கான முக்கியத்துவத்தை, அரசதரப்பு மட்டும் குறைத்துக் கொள்ளவில்லை. விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், இலங்கைக்கான சமாதானத் தூதுவர் என்ற அடைமொழி அகாசிக்குத் தேவைப்படவில்லை.

அதற்கு முன்னர், அந்த அடைமொழியை வைத்துக் கொண்டு அவர் எதையும் சாதித்திருக்கவும் இல்லை.

போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கைக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு, மற்றும் அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான தூதுவர் என்ற அடைமொழி அவருக்கு கொடுக்கப்பட்டது.

போர் முடிவுக்கு வந்த பின்னரும் அவ்வப்போது, இலங்கைக்கு வந்து போகும் அகாசியை, தமிழ் மக்கள் பெரிதாக கணக்கில் எடுப்பதேயில்லை. ஏனென்றால், தாம் எதிர்பார்க்கும் எதையும் தரத்தக்கவராக அகாசி இல்லை என்ற உண்மை அவர்களுக்குப் புரிந்து விட்டது.

அமெரிக்க, இந்திய இராஜதந்திரிகளின் பயணத்துக்கு தமிழர்கள் கொடுக்கின்ற முக்கியத்துவத்தை, அகாசிக்கு அவர்கள் கொடுப்பதேயில்லை.

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனர்வாழ்வுக்காகவும், புனரமைப்புக்காகவும், ஜப்பான் குறிப்பிட்டளவு நிதியுதவிகளை செய்திருப்பினும், அகாசி அத்தகைய நிதியுதவிப் பொதியுடன் வருவதாக இருந்தாலும் கூட, அவருக்கு அந்த மதிப்புக் கிடைப்பதில்லை.

ஏனென்றால், சர்வதேச சமூகத்திடம் இருந்து தமிழர்கள் எதிர்பார்ப்பது நிவாரணத்தையோ, நிதியுதவியையோ அல்ல.

அவற்றுக்கும் மேலாக, தமது உரிமைகளை உறுதிப்படுத்துவது, அரசியல் தீர்வுக்கு வலியுறுத்துவது, போர்க்குற்றங்களுக்கு பதிலளிப்பது என்பன போன்ற விவகாரங்களிலேயே சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் உதவியையும் தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதனால் தான், அமெரிக்காவின் இராஜதந்திரிகளுக்கோ, ஏனைய மேற்குலக இராஜதந்திரிகளுக்கோ தமிழர்களிடம் கிடைக்கின்ற வரவேற்பும், ஆதரவும் அகாசி போன்ற ஜப்பானிய இராஜதந்திரிகளுக்குக் கிடைப்பதில்லை.

இப்போதும் கூட அகாசி மேற்கொண்ட பயணத்துக்கு தமிழர் தரப்பு அவ்வளவு பெரிய முக்கியத்துவத்தைக் கொடுத்திருக்கவில்லை.

கடந்த 11 ஆண்டுகளில், அகாசி இலங்கைக்கு 23 தடவைகள் வந்து சென்றிருக்கிறார்.

ஆனாலும், மஹிந்த ராஜபக் அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், கொழும்பு வரும் போதெல்லாம் அகாசிக்காக அலரி மாளிகையின் கதவுகள் எப்போதும் அகலத் திறந்தேயிருக்கும்.

இம்முறையும் அப்படித் தான், கடந்த 8ம் திகதி மாலை கொழும்பு வந்த அவர் மறுநாள் காலையிலேயே, அலரி மாளிகைக்குச் சென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேசினார்.

அமெரிக்க, இந்திய இராஜதந்திரிகளுடன், அகாசி போன்றவர்கள் இந்த விடயத்திலும் கூட முரண்படுகின்றனர்.

அதாவது, அமெரிக்க, இந்திய இராஜதந்திரிகள், அமைச்சர்கள் இலங்கைக்கு வரும் போது, முதலில், களநிலவரங்களை அறிந்து கொள்வதற்கே முக்கியத்துவம் அளிப்பதுண்டு. நீண்ட பயணம் என்றால், யாழ்ப்பாணம், கிழக்கு போன்ற பகுதிகளுக்கு செல்வதும், சிவில் அமைப்பு பிரதிநிதிகள், அரச அதிகாரிகளை சந்திப்பதும், அவர்களின் முக்கிய இலக்காக இருக்கும்.

அடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் கருத்துகளை கேட்டறிந்து விட்டு, கடைசியாக அலரி மாளிகை யில் காலடி எடுத்து வைப்பர்.

அது, பிரச்சினைகள், களநிலவரங்கள் குறித்து ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்புவதற்கான வாய்ப்பை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும்.

ஆனால், அகாசி அப்படியல்ல. அவர் முதலில், ஜனாதிபதியையும் மற்றும் அமைச்சர்களையும் சந்திப்பார். அரசதரப்பின் விளக்கங்களை கேட்டறிந்து கொண்ட பின்னரே, ஏனைய தரப்பினரைச் சந்திப்பார்.

அவர்கள் கூறும் குறைநிறைகளைப் பற்றியெல்லாம், அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாக கூறிவிட்டு, அப்படியே விமானமேறிச் சென்று விடுவார். இது தான் அகாசியின் அண்மைக்காலப் பயண வழக்கங்கள்.

இந்தமுறை, அதாவது 23வது தடவை மேற்கொள்ளப்பட்ட அவரது பயணமும் அந்த விதமாகவே அமைந்திருந்தது.

அவர் தனது பயணத்தின் இறுதிக்கட்டத்தில், கொழும்பில், வைத்து கடந்த 10ம் திகதி இரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

ஆனால், இந்தமுறை அவர் வடபகுதிக்குச் செல்லவில்லை. அண்மைக்காலத்தில், அதாவது கடந்த செப்டெம்பர் மாதம் வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்குப் பின்னர், இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட வெளிநாட்டுத் தலைவர்கள், இராஜதந்திரிகள் யாழ்ப்பாணம் செல்வதை முக்கியமான திட்டமாக கொண்டிருந்தனர்.

அதாவது வடக்கு மாகாணத்தின் புதிய முதலமைச்சரை சந்தித்துப் பேசுவதற்காக பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன், உள்ளிட்ட பலரும் யாழ்ப்பாணம் சென்றனர்.

ஆனால், தமிழர் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான முயற்சியில் ஈடுபட்ட அகாசி மட்டும் வடக்கு மாகாண முதலமைச்சரைச் சந்திக்க முனையவில்லை.

அதேவேளை, கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அகாசி நடத்திய சந்திப்பில் வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் பங்கேற்கவுமில்லை.

வடக்கு மாகாணசபையின் வரவு-செலவுத் திட்டத்தை அவர் சமர்ப்பித்து, அது தொடர்பான விவாதத்தில் பங்கேற்க வேண்டிய தேவை இருந்ததால், அவரால் கொழும்பு வரமுடியவில்லை.

ஆனாலும், விக்னேஸ்வரனை சந்தித்து புதிய மாகாணசபை நிர்வாகம் குறித்து, அறிந்து கொள்ளும் ஆவல், ஒரு பழுத்த இராஜதந்திரியாக கருதப்படும் அகாசிக்கு இல்லாமல் போனது ஆச்சரியமே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பின் போது, எல்லா விபரங்களையும் கேட்டு விட்டு, பொறுமையுடன் இருக்குமாறு ஆலோசனை கூறியிருந்தார் அகாசி.

அது இரா.சம்பந்தனுக்கு சினத்தை ஏற்படுத்தியதால் தான், அவர் 23வது தடவை என்ன நிலை இருக்கிறதோ அதே நிலை தான் 24வது தடவை இங்கு வரும் போதும் இருக்கும் என்று பதிலடி கொடுக்கும் நிலையை உருவானது.

சர்வதேச சமூகம் அடுத்த மார்ச் மாதம் நடக்கவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் அடுத்தகட்ட நகர்வுக்குத் தயாராகும் சூழலில், தான் அகாசியின் இந்த பயணம் இடம்பெற்றது.

சர்வதேச சமூகத்தின் கரிசனைகளை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அகாசி கூறியிருந்தாலும், அவரது பயணம், அடுத்த ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான நகர்வுகளைப் பலவீனப்படுத்தும் ஒரு முயற்சியாகவே கருதப்படுகிறது.

அதாவது அரசாங்கத்தின் ஒரு தடைநீக்கியாக இப்போது அகாசி மாறியிருக்கிறார்.

மேற்குலக அழுத்தங்களுக்கு உள்ளாகி வரும் இலங்கை, அதிலிருந்து விடுபடுவதற்கான தனது பலமுனை நகர்வுகளில் ஒன்றாகவே அகாசியையும் களமிறக்கியுள்ளது.

வரும் மார்ச் மாத ஜெனிவா கூட்டத்தொடரை எதிர்கொள்வதில் அகாசியின் பங்கு எத்தகையதாக இருக்கப் போகிறது. அவரால் அரசாங்கத்தை காப்பாற்ற முடியுமா? என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

**கே. சஞ்சயன்**

(நன்றி- தமிழ்மிரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையிற் சோழர்கள்

ஒவ்வொரு மண்டலமும் ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. வளநாடு பல நாடுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தன. நாடு பல கிராமங்களைக் கொண்டிருந்தது. எனவே சோழ அரசின் மிகச்சிறிய பிரிவு கிராமமாக இருந்தது.

மண்டலங்கள் அரசகுமாரர்கள் அல்லது அரசனின் நெருங்கிய உறவினர்களின் பொறுப்பில் இருந்தன. இப்பதவியில் அமர்த்தப்பட்டவர்கள் மண்டலங்களின் பாதுகாப்பு, ஒழுங்கு ஆகியவற்றைப் பராமரிப்பதுடன், கீழுள்ள நிர்வாகப் பிரிவுகளின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதையும் கடமையாகக் கொண்டிருந்தனர்.

மேற்படி நிர்வாக முறைகள் சோழர்களால் கைப்பற்றப்பட்ட நாடுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. சோழர்களின் இலங்கை மீதான படையெடுப்பு பொருளாதாரக் காரணங்களுக்காகவும், தமிழகத்தில் தமது ஆட்சியைப் பலப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. எனினும் அவை இலங்கையில் உருவாக்கிய தாக்கம் வரலாற்றாசிரியர் திரு.கிங்ஸ்லி. டி.சில்வா பார்வையில் கீழ்வருமாறு இருக்கிறது.

"சோழராட்சியின் தவிர்க்க முடியாத தாக்கம் என்னவெனில், இலங்கை மதத்துறையிலும் ,பண்பாட்டுத் துறையிலும் இந்து மரபுகளும், வழமைகளும், திராவிடக் கட்டடக் கலையும், தமிழ் மொழியும் ஊடுருவி மிகப்பலமான வளர்ச்சி பெற்றதேயாகும்" என்கிறார்.

இலங்கை முழுவதையும் ஆண்ட சோழர்களின் செல்வாக் குப் பெற்ற பிரதேசமாக திருகோணமலை இருந்ததை வரலாற்றாதாரங்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. எனவே திருகோணமலையில் சோழர்கள் பற்றிய விரிவான ஆராய்தல் அவசியமாகிறது.

சுமார் 95,000 சோழப்படையினரைக் கொண்டிருந்த ஈழமான மும்முடிச்சோழ மண்டலத்தில் ஜனநாத மங்கலம் என்கின்ற பொலநறுவை தலைநகரமாக இருந்தபோதிலும் திருகோணமலை, கந்தளாய், பதவியா ஆகிய மூன்று நகரங்களை இணைக்கும் முக்கோணப்பகுதியே அவர்களுடைய வணிக , பண்பாட்டுக் கலாச்சார செயற்பாடுகள் நிறைந்த பகுதியாக இருந்தது.

திருகோணமலைத் துறைமுகம் பண்டைக்காலத்திலேயே புகழ்பெற்றிருந்ததோடு தமிழக வணிகர்களுக்கு பயனுள்ள துறைமுகமாகவும் விளங்கிது. அதேவேளை தென்கிழக்காசியப் பிரதேசத்தில் திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்திருந்த சோழர்கள் தமது கடாரம், ஸ்ரீ விஜயம் நோக்கிய படையெடுப்புகளுக்கு ஒரு தளமாக இதனைப் பயன்படுதுவதன் மூலம் வங்காள விரிகுடாவில் தமது வணிக ஆதிக்கத்தை நிலைநிறுத்த முனைந்தனர்.

மேற்கூறிய காரணங்களோடு திருகோணமலையில் இருந்த ஆதிக்குடிகளின் அரசுகள் சிற்றரசுகளாக் காணப்பட்டதே அன்றி ஒரு இராட்சியமாக உருவாகி இருக்காமையும், இந்து சமுத்திரத்தின் இரு பக்கங்களிலும் ஒரே பண்பாட்டுடைய மக்கள் வாழ்ந்தமையும் திருகோணமலையில் சோழர்கள் தங்களது பலமான நிர்வாக அலகுகளை நிறுவுவதற்குக் காரணங்களாக அமைந்தது எனலாம்.

எனைய மாவட்டங்களை விட அதிகளவில் கிடைத்த சோழர்கள் தொடர்பான தொல்லியல் சான்றுகளும், அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் வரலாற்றுத் தகவல்களும் இதையே நமக்கு உணர்த்தி நிற்கின்றன. இவற்றோடு ஈழமான மும்முடிச் சோழ மண்டலத்தின் அதிகாரங்களைக் கவனிக்க அனுப்பப்பட்ட பிரதிநிதியான சோழ இலங்கேஸ்வரன் பற்றிய இரு கல்லவெட்டுக்களின் ஆதாரங்களும் திருகோணமலையின் கந்தளாய், மானாங்கேணி ஆகிய இடங்களில் கிடைத்ததும் குறிப்பிடத்தக்கது.

சோழர் ஆட்சியில் ஒவ்வொரு மண்டலமும் ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன எனப்பார்த்தோம். அதன் அடிப்படையில் ஈழமான மும்முடிச் சோழ மண்டலத்தில் இதுவரை ஆறு வளநாடுகளே அடையாளங் காணப்பட்டுள்ளன. அவற்றுள் அருண் மொழித்தேவ வளநாடு (மாதோட்டமான இராஜராஜபுரம் ) , நிகரிலிச் சோழ வளநாடு என்பவை தவிர்த்து மிகுதி நான்கு வளநாடுகளும் திருகோணமலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அவையாவன,1. இராஜேந்திர சோழவளநாடு - திருகோணமலையும் ,கந்தளாயும் உள்ளடங்கிய பகுதி. இது மும்முடிச் சோழ வளநாடு, இராஜவிச் சாதிர வளநாடு என்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டது.2. விக்கிரம சோழ வளநாடு என்னும் கணக்கன் கொட்டியாரம் ( மூதூரின் ஒரு பகுதி)

3. இராஜராஜ வளநாடு என்னும் மாப்பிசும்பு கொட்டியாரம் ( மூதூரின் மற்றொரு பகுதி )

4. இராஜேந்திர சிங்க வளநாடு - மானவத்துளா அல்லது வீரபரகேசரி வளநாடு என்றழைக்கப்பட்ட இப்பிரதேசமே பின்னாட்களில் கட்டுக்குளம் பற்று என வழங்கப்பட்டது. இங்குதான் இராஜராஜப் பெரும்பள்ளி இருக்கிறது.

தொடர இருப்பது .... இராஜேந்திர சோழவளநாடு

**-வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்-**

## எத்தனை காலம் தான்......?

காலையில் அலுவலகத்திற்கு வந்தவுடன் தினசரி பத்திரிக்கை முழுவதையும் வாசித்த பின்புதான் தனது நாளாந்த அலுவலக கடமைகளை ஆரம்பிப்பது அந்த மாவட்ட உயர் அதிகாரியின் வழமையான செயற்பாடாகும்.

அவர் மிகவும் சுறுசுறுப்பானவர், பொதுமக்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைபாடுகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பதில் அவர் என்றுமே பின் நிற்பதில்லை. மேலும் அவர் தனது உத்தியோகத்தர்களைவிட, பொதுமக்களை நம்புவது மாத்திரமல்ல நேசிப்பதும் கூட.

"பொது மக்கள் எமது எஜமான்கள், நாம் அவர்களின் சேவர்கள்" என்ற பதத்தை எந்தவொரு கலந்துரையாடல், பொதுக் கூட்டம் ஆகியவற்றில் குறிப்பிட அவர் என்றுமே தவறுவதில்லை.

அன்று அவர் வழமைபோல் தினசரிப் பத்திரிகைகளை வாசித்துக் கொண்டிருந்த போது தேசிய பத்திரிகையொன்றில் கட்டமிடப்பட்ட தலைப்புச் செய்தி யொன்று அவரை பிரமிக்க வைத்ததுமல்லாமல் கவலையடையவும் செய்தது.

அந்த செய்தியில் குறிப்பிட்ட விடயத்தை ஆராய்ந்து பார்க்கதானே களத்திற்கு செல்லவேண்டும் மென்று முடிவு செய்தார். வேறு ஒரு உத்தியோகத்தர் ஒருவரை அதற்கு நியமித்தால் குறித்த விடயத்தின் யதார்த்த நிலையை அவரால் முற்று முழுதாகவும் நேர்த்தியாகவும் அறிந்து கொள்ள முடியாதென்பதும் அவரின் நீண்டகால அரச சேவையில் அவர் கற்றுக் கொண்ட பாடமும் அனுபவமாகும். அதுமாத்திரமல்ல, குறித்த உத்தியோகத்தர் தனக்கேனும் அதில் இலாபம், வசதி இருக்குமா? என்பதிலே கண்ணும் கருத்துமாக இருப்பார். அதனால் அந்த உயர் அதிகாரி எடுத்த முடிவு வெகு தீர்க்கமானதாக இருந்தது.

அந்த உயர் அதிகாரி தினசரிப் பத்திகையில் படித்த செய்தி இதுதான். எந்தவொருவரினது உதவியும் இன்றி ரியுஷன் வகுப்புகலுக்குக் கூட செல்லாமலே தனது சொந்த முயற்சியில் பாடசாலையில் கற்பித்தவைகளைக் கொண்டு ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசு பரிட்சையில் மாவட்டத்தில் சிறந்த மாணவனாக சித்தி பெற்றிருந்ததே. சிறந்த மாணவனாக தேர்தெடுப்பதால் அவன் மாவட்டத்தில் உரிய சித்திக்கு தேவையான புள்ளிகளை விட ஆகக் கூடிய புள்ளிகளை பெற்றிருக்க வேண்டும் அந்த தகமைகளை பூர்த்தி செய்த வகையிலும், ரியுஷன் வகுப்புகலுக்கு செல்லாமல் சித்தி பெற்ற படியாலும் அவனது பெயர் பத்திரிக்கையில் இடம் பெற்றிருந்தது.

இன்று 5ம் ஆண்டு பரிட்சைக்காக பெற்றோர் தமது பிள்ளைகளை ஊக்குவிக்கும் முறை பாரிய திறந்த போட்டியாக இடம்பெற்றுவருவது நாம் அனைவரும் தெரிந்த விடயம். பிள்ளை சித்தி பெற வேண்டும் அதிலும் ஆக்க கூடிய புள்ளிகளைப் பெறவேண்டும். என்ற வெறியில் ஆதங்கத்தில் பெற்றோர் பிள்ளைகளால் தாங்க முடியாத தொந்தறுவுகளை கல்வி விடயத்தில் காட்டி வருவது புதியதுமல்ல.

சில பிள்ளைகள் தம் பெற்றோரின் ரியுஷன் ஆசிரியர்களின், தொல்லைகள் காரணமாக சரியாக சாப்பிடுவதுமில்லை சரியாக தூங்குவதுமில்லை மேலும் சரியாக விளையாடி பொழுது போக்காக இருந்ததுமில்லை எப்படியும் பிள்ளை சித்திபெற வேண்டுமென்பதில் பெற்றோர் மிக ஆவேசமாகவே பிள்ளைகளை நடாத்துவார்கள்.

சிலர் பிள்ளைகளை பயமுறுத்தி கல்வியை ஊட்டுவர். சிலர் அன்பாலும், அவர்கலுக்கு தேவையானவைகளை வேண்டிக் கொடுத்தும் தம் இலக்கை அடைந்து விடுவர்.

பரிட்சைகளில் குறித்த இலக்கை பிள்ளைகள் அடையா விட்டால் மிருகத்தனமாக தங்கள் ஆத்திரத்தை வெளிப்படுத்திய பெற்றோர்கலும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவற்றை ஊடகங்களுடன் நாம் அறிந்தும் இருக்கின்றோம்.

அதே வேளை தம் பிள்ளை சிறந்த பெறுபேற்றை பெற்று விட்டால் பெற்றோர் அனுபவிக்கும் ஆனந்தத் திற்கும் அளவில்லை குறித்த பரிட்சையினால் பல பிள்ளைகளின் மனநிலை, தேகநிலை, பாதிப்படைவது குறித்த அரசு அப்பரிட்சையை இரத்து செய்ய முடிவு செய்துள்ளதாக ஊர்ஜிதமற்ற பல செய்திகள் அன்மையில் நாட்டினுள் உலாவியதும் நாம் அறிந்ததே.

அன்று பத்திரிகையில் குறித்த மாணவன் தொடர்பில் வெளியான செய்தியின் யதார்த்த நிலையை கண்டறிய அந்த உயர் அதிகாரி புறப் பட்டுச் சென்றார். அவர் நேரடியாக அவன் கற்கும் பாடசாலைக்குச் சென்று அவனைப் பற்றிய முழுவிபரங்களையும் அதிபரிடமும் குறித்த ஆசிரியரிடமும் அறிந்து கொண்டு நேரடியாக அவனது வீட்டுக்குச் சென்றார்.

அந்த வீடு கிராமத்தின் நடுவில் அமைந்திருந்தது களியால் கட்டப்பட்டிருந்தாலும் அது முற்றுப்பெறாத அறை குறையான ஓர் ஓலைக் குடிசையாகும். அந்த உயர் அதிகாரியை கண்டதும் குறித்த மாணவனின் தாயார் வெளியில் வந்து அவரை வரவேற்றார்.

அங்கு ஓங்கி வளர்ந்த நின்ற தென்னை மரத்திற்கு கீழ் வைக்கப்பட்டிருந்த வாங்கில் உயர் அதிகாரி சென்று அமர்ந்து கொண்டு குறித்த மாணவனின் வீட்டு நிலைமைகளை அவனது தாயார் மூலம் மனதில் பதிவு செய்து கொண்டார். அக் குடும்பத்தினர் மிகவும் ஏழைகள் என்பது யாரும் கூறாமலே அதிகாரியின் கண்களுக்கு தென்பட்ட உண்மையான விடயமாகும். மாணவனின் தாயார் தனது நேர்ந்ததை விபரித்தார்.

அன்று கடுமையான மழை, காற்று, என்பதால் அக் கிராமதிலுள்ள கைதொழிலாளர்கள் ஒருவரும் கிராமத்தை விட்டு வெளியேறாமல் வீட்டுக்குள் முடங்கிக்கிடந்தனர். தனது மகன் பசிக்குது என கூறியதை அடுத்து தகப்பன் சந்தியிலுள்ள கடையொன்றுக்கு பாண் வேண்ட சென்றிருந்தார். பாணை வேண்டிவிட்டு வீட்டுக்கு வரும் பொழுது பலத்த காற்று வீசியதால் நேரத்திற்கு அவரால் வீட்டுக்கு வரமுடியவில்லை.

இடியுடன் சேர்த்து மழை பெய்ததால் அந்த இரவு வேளையில் வீட்டுக் செல்லும் வழிகூட அவரின் கண்கலுக்கு தெரியவில்லை. நீண்ட நேரம் சென்றதால் நானும் மகனும் குப்பி லாம்பின் வெளிச்சத்தின் உதவியுடன் எனது கணவரை தேடிச் சென்றோம். காற்றின் வேகம் சற்று தனிந்து, மேலும் மழை சற்ற குறைந்திருந்தால் எங்கலுக்கு அங்கு செல்ல தடைகள் எதுவும் இருக்கவில்லை.

இருப்பினும் ஆங்காங்கே மரங்கள் முறிந்து விழுந்து கிடந்தன. வீதியாக செல்ல முடியாததால் வயல் வரம்பின் மேல் நடந்து சென்றோம். மழை காரணமாக வயல் நிறைய தண்ணீர் தேங்கி நின்றது. அந்த தண்ணீருக்குள் ஏதோ ஒன்று புதைந்து கிடப்பதைக் கண்டோம்.குப்பி லாம்பின் வெளிச்சத்தில் அங்கு உற்றுப் பார்த்த பொழுது எனது கணவர் தண்ணீருக்குள் புதைந்து போய் இருந்தார். சற்று தூரத்தில் சொப்பின் பேக்கில் இடப்பட்ட ஒரு இறாத்தல் பாண் தெரிந்து கொண்டிருந்தது.

அதைக்கொண்டு அங்கு இறந்து கிடந்தவர் எனது கணவர் என்று தெரிந்து கொண்டேன். அதிக காற்று, மழை காரணமாக மின்சாரக்கம்பத்தி லிருந்து கம்பி அறுந்து விழுந்ததால் அந்த மரணம் சம்பவித்தது என்று பொலிஸ் புலனாய்வில் இருந்து தெரிய வந்தது. இவ்வளவும் அம்மாணவனின் தாயார் கண்ணீர்மல்க கூறிய சோகக் கதையாகும்.

அக் கதையை கேட்டு உயர் அதிகாரி கவலை கொண்டாலும் சில குறுக்கு கேள்விகளை கேட்க தவறவில்லை ஏன்னென்றால் அரசாங்க அதிகாரிகளில் வழமையான குணம் அது அவரின் குறுக்கு கேள்விகளில் இருந்து கீழ்க் காணும் பதில்கள் மாணவனின் தாயாரின் வாயில் இருந்து வெளி வந்தது.

எனது மகனை ரியுஷன் வகுப்புக்கலுக்கு அனுப்பும் அளவுக்கு என்னிடம் பண வசதியில்லை எனது கணவர் நாளாந்த கூலி வேலை செய்பவர். மாதத்தில் முழு நாலும் வேலை கிடைப்பது கஷ்டம். நாங்கள் இரண்டு பேரும் கல்வியறிவற்றவர்கள். எப்படியும் மகனை படிபிக்க வேண்டுமென்ற ஆசை இருப்பதை அறிந்து அவன் சுயமாகவே படி

**...நாட்டு நடப்பு...**

த்து வருகிறான்.

ஜனசக்தி மாத்திரம்தான் நிலையான வருமானம் அதைவிட வேறொன்றுமில்லை என அப்பெண் மனமுருகி பதிலளித்தார். உயர் அதிகாரி தனது கையடக்க தொலை பேசி மூலம் சுகாதார அமைச்சின் அவ்விடத்திலே வழக்க விட்டு புறப்பட்டார்.

தற்பொழுது குறித்த மாணவனின் தாயார் அரசினர் மருத்துவ மனையில் சிற்றூழியராக கடமை புரிகிறார். மாணவனுக்கு பிரதேசத்தில் உயர் பாடசாலை யொன்றில் சேர்ந்து கற்கும் வாய்ப்பும் கிடைத்தது.

- துட்டகைமுனு -

# புதிய பெண்ணாக

சிறுகதை

அன்று காலை கீதா நித்திரை விட்டு எழும்பும் போது நேரம் ஆறு மணியைத் தாண்டியிருந்தது. அதுவும் அவள் அவளாக விழித்துக் கொள்ள வில்லை. மாமியாரின் சமையல் தடபுடல் முடிந்து முற்றம் கூட்டும் சத்தத்தில் தான் விழிப்புக் கொண்டாள்.

அவள் தாமதமாக எழும்புவதற்குக் காரணம் கணவன் ராஜா தான். ராஜா அன்று இரவு நண்பர்களுடன் சேர்ந்து குடித்துவிட்டு வந்து வீட்டுக் கதவினைத் தட்டும் போது மணி பன்னிரெண்டினைத் தாண்டியிருந்தது. அவனுக்குரிய அனைத்துப் பணிவிடைகளும் முடித்து கீதா தூங்கும் போது மறுநாளில் ஒன்றரை மணித்தியாலங்கள் செலவாகியிருந்தன.

எவ்வாறு கீதா அதிகாலையில் விழிப்பது! சற்றுத் தாமதமாக விழித்துக் கொண்டவள், மாமியாரின் வசவுகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக புகுந்த வீட்டிலிருந்து தன் தாய் வீட்டிற்குச் செல்ல வேண்டும் எனக் கணவனிடம் கேட்டாள்.

அவனிடம் இருந்த காசு எல்லாம் நண்பர்களுடன் கூடி குடித்துச் செலவழித்துவிட்டான் என்று தெரிந்தும் அவள் வீட்டிற்குச் செல்ல வேண்டும் எனக் கேட்டாள் என்றால் அவளிடமிருந்த ஐநூறு ரூபா கொடுத்த தைரியம் தான்.

ஆனால் முதல் நாள் இரவு ராஜா குடிப்பதற்காக செலவழித்தவற்றில் கீதாவின் ஐநூறு ரூபாயும் அடங்கும் என்பது அவள் தனது கைப்பையினைத் திறந்து பார்த்த போதுதான் புரிந்தது. தன் வாழ்க்கையினை நினைத்து ஏமாற்றத்தோடு தேம்பித் தேம்பி அழத்தொடங்கினாள் கீதா.

அந்தச் சந்தர்ப்பத்துக்காக காத்துக்கிடந்தவர்கள் போல கணவனினதும், மாமியாரினதும் வசவு அம்புகள் கீதாவை குத்திக் காயப்படுத்தின. பதில் அம்புகள் எதுவும் எய்யப்படவில்லை. காரணம் கீதா புகுந்த வீட்டில் தனிக் கட்டை என்பது தான். "ஏனடி காலமையும் தரித்திரம் பிடிச்சவள் மாதிரி அழுகிறாய், உன்ர பாழ்பட்ட கண்ணீரால வீடும் விடியாதடி.

இது மாமியாரின் ஆரம்பப் படலம். அம்மா சொல்றது விளங்கேல்லயாடி உனக்கு இங்கயிருந்து அழாதபடி எங்கேயண்டாலும் போய் துலையடி. இன்னொரு தரம் அழுது சத்தம் கேட்டா நான் மனிசனாவே இருக்கமாட்டேன்டி, என்னைப் பற்றி உனக்கு நல்லாவே தெரியும்".

இது கணவனின், தாயினோடு இணைந்த படலம். இணைந்த படலத்தினால் இடிந்து போன கீதா வெடித்துக் கதறினாள்.

கொஞ்சமும் தாமதம் செய்யாமல் ராஜா பாய்ந்து சென்று கீதாவின் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியதோடு மட்டுமல்லாமல் அவள் பிறந்த வீடு செல்வதற்காக



தயார்நிலையில் வைத்திருந்த பயணப்பையினையும் அவள் மீது விட்டெறிந்தான். வீட்டை விட்டு வெளியேறுவதற்கான சந்தர்ப்பத்தை பார்த்துக் கொண்டிருந்தவள், பயணப்பையினையும் எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு விசுக்கென வெளியேறினாள்.

தனது ஐநூறு ரூபா களவாடப் பட்டமையால் எப்படியும் வீட்டிற்குச் செல்லமுடியாது என்பதை ஊகித்துக் கொண்டவள் தனது பயணப்பையினுள் ராஜாவின் தங்கையான ரமணியின் வீட்டுத் திறப்பினை எடுத்து வைத்திருந்தாள்.

ரமணி வேலையின் நிமித்தம் கொழும்பு சென்றிருந்தமையால் அவளது வீட்டினை பராமரிக்கும் பொறுப்பு கீதாவின் மாமி மங்கம்மாவிற்குக் கிடைத்தது.

அதனால் தான் அந்த வீடு கீதாவிற்கு வசதியாகப்பட்டது. வீட்டில் யாருமே இல்லை. கதவினைத் திறந்தவள் பயணப் பையினை வீசி எறிந்துவிட்டு கதவை உட்புறமாகத் தாழிட்டுக் கொண்டு ஓவெனக் கத்தினாள்.

சில நிமிடங்களிலே தன்னைத் தேற்றியவளாய் அந்த வீட்டினை சுத்தப்படுத்தி சீர்ப்படுத்திய பின்பு தேநீர் போட்டுக் குடித்தாள்.

காலையில் இடம்பெற்ற சச்சரவில் அன்று அவள் எதுவுமே உண்ணவோ குடிக்கவோ இல்லை. அந்தத் தேநீர் அவளைச் சுறுசுறுப்பாக்கியது.

குசினியில் இருந்த தட்டுமுட்டுச் சாமான்களைக் கொண்டு சமைத்தாள். ஆனால் சாப்பிடவில்லை.

மேசையில் கிடந்த பழைய பத்திரிகை ஒன்றைப் புரட்டியவள், ஒரு சில பக்கங்களைப் புரட்டுவதற்குள் தூக்கம் அவளைத் துரத்தியது. அதுவும் சில நிமிடங்கள் தான்.

திடீரென விழிப்புக் கொண்டு குளியலறை நோக்கிச் சென்றவள், குளித்துவிட்டு வந்து இயங்காத உயிரற்ற தொலைக்கா ட்சியின் முன் அமர ்ந்து தன் அலை

வ ரிசைகளை ஓடவிட்டுப் பார்த்தவாறு நாடியினை பிடித்துக் கொண்டிருந்தவளுக்கு மாலை ஏழு மணியானது கூடப் புரியவில்லை.

வெளிச்சமே இல்லாத தனி வீட்டில் அவளுடைய மனமும் வெளிச்சம் இன்றி இருட்டில் கிடந்தது. தனிமையில் தனிமை எத்தனை நிசப்தங்கள். திடீரென அழைப்பு மணி ஒலித்தது. கதவும் திறக்கப்பட்டது. பக்கத்து வீட்டுப் பச்சிளஞ் சிட்டுக்கள் இரண்டு தங்களுக்கே உரிய மழலை மொழிகளில் அவளை தங்களது வீட்டிற்கு வருமாறு அழைத்தனர்.

அவ் அழைப்பிற்காய் காத்துக் கிடந்தவள் போல அப்பிஞ்சுகளில் ஒ்னறைத் தூக்கிக் கொண்டு நடந்தாள் கீதா அச்சிட்டுக்களின் வீடு நோக்கி.

வீட்டில் எத்தனை பெரிய உபசரிப்புக்கள். அவ் உபசரிப்புக்கள் கீதாவின் நிலையி னைப் புரிந்து கொண்டு உபசரிப்பது போன்று இருந்தது அவளுக்கு.

தாயின் கையிலிருந்த உணவுத் தட்டினை பறித்து வந்து அவளருகே நின்று உபசரிக்கின்றது ஒரு சிட்டு.

நான்கு வயது நிரம்பிய இளையது இருபது ரூபாவை கொண்டு வந்து கையில் திணிக்கிறது.

"உங்களுக்குத் தான் வைச்சுக் கொள்ளுங்க, இண்டைக்கு இரவு நில்லுங்க நாங்க ஒவ்வொரு நாளும் சாப்பாடு தாறம் உங்களுக்கு"

அந்த வீட்டில் கீதா தனியாக இருப்பதனைப் பார்த்த சிட்டுக்களின் பரிதவிப்பு இது. இத்தனை சிறிய சிட்டுக்களுக்கு எத்தனை பெரிய மனசு.

அதே சமயம் வெறிபிடித்த இரு இரத்தக் காட்டேறிகள் கீதாவை விரட்டியதாக எண்ணி வெற்றிக்களிப்பில் ஏக்காளமிட்டுக் கொண்டு இருந்தன.

பாவம் காட்டேறிகளுக்குப் புரியவில்லை கீதா அடிமை வாழ்விலிருந்து விடுதலை பெற்றுவிட்டாள் என்று அவர்களின் அறியாமையினை மனதினுள் எண்ணியவாறு அசட்டுச் சிரிப்பொன்றோடு புறப்பட்டாள்

**"கீதா சுதந்திரமான வாழ்வினைத் தேடிய புதிய பெண்ணாக ......."**

**முற்றும்**

**சுமதா கந்தசாமி**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**
**வந்தாறுமூலை**

# செயலா? செய்யும் விதமா?

குட்டிக்கதை

அடிப்படையாக, வாழ்க்கையில் நாம் என்ன செயல் செய்கிறோம் என்பதைவிட, அந்த செயலை எப்படி செய்கிறோம் என்பதில்தான் நம் வாழ்க்கையின் தன்மை அமைகிறது.

ஒரு ஊரில் மூன்று பேர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு வந்த ஒரு வழிப்போக்கர் முதல் நபரிடம்,

"நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். அந்த நபர் நிமிர்ந்து பார்த்து, "பார்த்தால் தெரியவில்லையா?,

நான் கல் கொத்திக்கொண்டு இருக்கிறேன். உனக்கு என்ன கண் குருடா?" என்று கேட்டார்.

உடனே அந்த நபர் அடுத்தவரிடம் சென்று, "நீ இங்கே என்ன செய்துகொண்டு



இருக்கிறாய்?" என்று கேட்டார். அவர் உடனே நிமிர்ந்து பார்த்து, "ஏதோ வயிற்றுப் பிழைப்பிற்காக செய்கிறேன்.

அவர்கள் என்ன செய்யச் சொல்கிறார்களோ அதைச் செய்வேன், அவ்வளவுதான்" என்று சொன்னார்.

அடுத்து அவர் மூன்றாவது நபரிடம் சென்று, "நீ இங்கே என்ன செய்து கொண்டி ருக்கிறாய்," என்று கேட்டார்.

அதற்கு அந்த மூன்றாவது நபர் மிகவும் ஆனந்தமாக எழுந்து நின்று, "நான் இங்கே ஒரு அழகான கோவிலை உருவாக்கிக் கொண்டிருக்கிறேன்" என்று சொன்னார்.

அவர்கள் எல்லோருமே ஒரே வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறார கள். ஆனால் அந்த ஒரே வேலையை மூன்று பேருமே மூன்று விதமாக உணர்கிறார்கள்.

அதற்கேற்றார் போல்தான் அவர்கள் வாழ்க்கையின் தன்மையும் அமைகிறது.

எனவே எளிமையான செயல் செய்கிறீர்களா அல்லது மிகவும் கடினமான செயல் செய்கிறீர்களா என்பதைவிட செய்யும் வேலையை எப்படி செய்கிறீர்கள் என்பதுதான் உங்கள் வாழ்க்கைத் தன்மையை நிர்ணயிக்கிறது.

**ஆனந்தம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## குடும்பம்

உலகம் தந்தான் பல்வேறு
உயிர் தந்தான் விண்ணின்று
அரைவிலாது உயிர்கள் தம்மை
ஆண்டிடப் பணியில் ஆதாம்
மலரில் மணமுமாய்
எள்ளில் எண்ணையுமாய்
குலவியே வாழ ஏவாள்.
ஏற்றவள் உனக்கென்றீந்தான்

நாயகன் தலைவன் தன்னை
நலம் பலவுறவே காத்தல்
ஆயவன் கடமையென்று
அற்பணித்தமந்து வாழ்தல்
வேயொத்த மென்றோள் மாதர்
கடனெனவுணர்த்த தேவன்
நேயந்தங்கிட கிடந்த ஆதாம்
எலும்பெடுத்தவளை செய்தான்.

தாதுரு சோலை தன்னில்
தகு மரக் கனிகளுண்டு
தீதுணர் மரம் தவிர்த்து
சீருடன் வாழ வாழ்த்தி
ஓதுமத் தேவன் விண்ணில்
ஏகினன் அத்தினத்தே
ஓதிய குடும்ப வாழ்வின்
உயர்வினை உணர்த்தி சென்றான்

ஈசனுரைத்த வாக்கும்
இப்புவி தலைவன் வாக்கும்
வாசநாறோதியாளும்
விலக்கியே விளைத்தாள் பாவம்
பேசலாம் தகமைத்தில்லை
பேருலகெல்லாம் தோற்றாள்
ஆசையால் அச்சணத்தில்
அலகை செய் வஞ்சகத்தால்

நாதனதமாகாமை
நாட்யுரை கேளாமல்
மாதவளும் தான் தலமை
தாங்கியே இழந்தனள்கதண்
போதவிழ்தார் பேதையரே
பேசுமொழியுண்டுமக்கு
வேதமுதல்வனவன் விதிமீறில்
வினையுண்டாகும்

இழந்தவையாவும் மீட்டு
எமை முன்னிருந்தவாறு
விழங்கிடச் செய்யவென்று
மேதினி மேவி யேசு
உழங்கிய பாவஞ்செற்று
உயிர் பெற்று உலகோர் உய்ய
துழங்கினார் குரிசிர் அப்போ
தூறு செய்யலகை வீய்ந்த(து)

மக்களைப் பெற்று மகிழ்வெய்தி
மாண்புடன் கணவன்தனை மதித்து
தக்கதாம் செல்லவம் அத்தனையும்
தரணியிற் பெற்ற அறஞ்செய்து
மிக்கதாம் வேதநெறி வாழ்ந்து
வேதனவற்றாள் பணிந்து
திக்கெலாம் போற்ற பூமிதனில்
தினமும் மோட்சம் கண்டிடுவீர்

குடும்பம் தன்னில் குழுந்தையாய்
உற்றுத்தேவன் குவலையத்தை
இடும்பைகள் காக்க வழிவகுத்து
எமக்குமதை வைத்தேகினான்
திடமுடனிதுவே தேவ வழி
என்பதையுணர்ந்து மாண்புறவே
நடத்திடிலதுவே மோட்வ வழி

**டி. ஜி. சோமசுந்தரம்**
கொட்டியாரம், இலக்கிய மரபு
[முன்னாள் அதிபர். சம்பூர் மகாவித்தியாலயம்]

## தவிப்பு

பல நேரங்களில்
உனைப் பற்றிய
சிந்தனைகளே
எனைச் சுற்றி
வட்டமிடுகின்றன...!

நாம் நேசித்த
அந்தக் காற்று
தென்றலாகத் தான் இருந்தது
அன்று
ஆனால் இன்று
எனைத் தீண்டாமலே
சென்றுவிட்டது.

உன் நினைவுகளோடு
நானே எனக்கு
தினந்தோறும்
சமாதி கட்டிக் கொண்டிருக்கிறேன்.

கல்லறையில் நீ மறைந்து
போனாலும்
என் இதயவறையில்
என்றும் சுகமான
நினைவுகளோடு....!

நாம் காதலித்த
நாட்கள் நகர்ந்து சென்றாலும்
நாம் பேசிய
வார்த்தைகள் களவாடப்
பட்டாலும்
என்றும் உன் நினைவுகளை
நிராகரிக்க முடியாதவளாய்
நான்...!

**சசிகலா வேலாயுதம்**
கிழக்கு பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை

## தடைதாண்டி

நம் நேற்றை சந்திப்பு
கடந்த பின் -
நீ -
உன்னை எந்நிமிடமும்
எதிர் கொள்ள
நான் தயாராகவே இருக்கிறேன்.

என் ஆத்துமமும், அறிவும்
முழு உள்ளமும், இந்த ஊறும்
உன்னை நோக்கியபடிக்கு
பனிப்புகையாய் மேலெழுவது
புரிகிறது எனக்கு.
இவ்வுணர்வுகளுக்கு
வேலியிட்டுப் பாத்தி கட்டிப்
பெயரிட நான் தயாரில்லை

நீயும் நானும்
வரையறைகளைக் கடக்கவேண்டும்
நான் உன் விவேகத்தோடும்
நீ என் வீரியத்தோடும்
கடக்க வேண்டும்.

எனினும்
என் கருவறையை
நிறைப்பது உன் குறியல்ல
என் புரிதலோடு
வா!

ஒன்றாய்க் கடப்போம்.
நீ என் விவேகத்தோடும்
நான் உன் வீரியத்தோடும்.

**ஆழியாள்**
கொட்டியாரம், இலக்கிய மரபு

## அந்தஸ்த்து

காக்கையாரின் அபிஷேகத்தால்
கோயில் கோபுரத்தில்
அரசமரம்
அகற்றத் தயங்குகிறது
அது அரச மரம்!

**ஷெல்லிதாசன்**

## தந்தையின் பிரிவு

தனிமையில் இருக்கும் போது
உன் நினைவு மட்டும்
எனக்கு சொந்தம்
நீ விரைவாக என்னை விட்டுப்
பிரிந்து சொல்வாய் என்பது
எனக்கு அன்றே தெரியும் என்றால்
உன் பிரிவுக்கு முன்னே
நான் இறந்திருப்பேன்
தந்தையே உன் இழப்பு
வாட்டுகின்றது என் உயிரை
உருக்குலைத்து விடுகின்றது
தவறு செய்தேன் என்ற போது
தட்டிக் கொடுத்து என்னை
அரவணைத்தாய் இன்று எந்த
தவறும் சொய்யாத போது
ஏன் என்னை விட்டுப் பிரிந்தாய்
உன் பாசத்திற்காக ஏங்குகிறேன்
உனக்காக தவிக்கிறேன்.

**கா. கவீயா**

# பாராளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரனின் உரை

இவ்வேளை எந்தவொரு காலத்திலும் யாரும் எதிர்நோக்காத மதவாத செயற்பாடுகளும், பௌத்த ஆதிக் கமும் இவ் அரசாங்கம் பொறுப்பேற்ற காலம் தொடங்கி நடைபெற்று வருகின்றது.

இந்நாட்டை பொறுத்தவரை இந்நாடு இந்து, பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதம் சார்ந்த மக்களின் சொந்த நாடாக உள்ளது. ஆனால் இன்று அரசியல் அமைப்பு தொடக்கம் அரசாங்கம் ஈறாக பௌத்த மதத்திற்கே பூரண ஆதரவை கொடுத்து ஏனைய சமயங்களை அடிமைப்படுத்தி வருகின்றன.

ஆசியாவில் அதிசயமிக்க நாடாக ஸ்ரீலங்காவை உருவாக்க வேண்டும் என்ற ரீதியில் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையே இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ ஆலயங்களை இடித்தலும், இச்சமய மக்களின் மத உரிமையை பறிப்பதுமாகும்.

82 வீதம் இந்துக்களை கொண்ட இந்தியா தன்னை இன்றுவரை ஒரு இந்து நாடு என வெளிப்பத்தவும் இல்லை. ஏனைய சமய மக்களை அச்சுறுத்தவும் இல்லை. ஆனால் இந்தியாவில் தோன்றி இன்று 2 வீதமாக இந்தியாவில் உள்ள பௌத்த மதத்தை இலங்கையில் அரசாங்கம் தலைமை மதமாக கொண்டு ஏனைய சமயங்களை அச்சுறுத்தி வருகின்றமை அதிகரித்த வண்ணம் உள்ளது.

இந்துக்களை பொறுத்தவரை இவர்கள் கௌதம புத்தரை பெரிதும் மதிக்கின்றனர். வெளிநாடுகளிலும் பெரும்பாலான இந்துவின் வீட்டில் கௌதம புத்தர் திருவருவ சிலை உள்ளது. ஏனெனில் அவர் பிறப்பால் ஒரு இந்து, அவரது போதனைகளை இவர்கள் தர்ம போதனைகள் என ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் இன்று கௌதம புத்தரின் போதனையின் வாரிசுகள் என கூறிக் கொள்ளும் பௌத்த துறவிகள் சிலர் எமது நாட்டில் ஏனைய சமய மக்களை அச்சுறுத்தி வருகின்றனர்.

தற்போது மகிந்த சிந்தனை அடிப்படையில் பல இந்துக் கோயில்கள் யுத்தத்தை காரணம் காட்டி உடைக்கப்பட்டுள்ளது. இன்னும் சில இந்து கோயில்கள் உடைக்கப்பட்டு அவ்விடங்களில் பௌத்த விகாரைகள் கட்டப்பட்டுள்ளது.

சிங்கள மக்கள் எப்போதும் வாழாத பகுதிகளில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் தற்போது பல புத்த விகாரைகள் தோன்றியுள்ளது. ஒவ்வொரு இராணுவ முகாமிலும் புத்தர் விகாரை தோன்றியுள்ளது. எமது நாட்டில் சமாதானத்தை உருவாக்க கௌதம புத்தர் வருகை தந்ததாக மகாவம்சம் கூறும் போது அதற்கு எதிர் மாறாக சில பௌத்தர்கள் கௌதம புத்தரின் திருவுருவ சிலையை கொண்டு ஏனைய சமயங்களை குழப்புவதும், வேதனைப்படுத்துவதும் மகிந்த சிந்தனையில் உருவாகி உள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இன்று பல இந்து கோயில்கள் களவாடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை புதுக்குடியிருப்பு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் கடந்த வருடம் வைகாசி மாதம் இடம்பெற்ற அம்பாளின் நகை களவாடல் சார்பாக இதுவரை பொலிஸ் பிரிவினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அது தவிர கடந்த ஆனி மாதம் அளவில் குருக்கள்மடம் செல்லக் கதிர்காமர் ஆலயம், மாங்காடு சித்தி விநாயகர் ஆலய சிலை உடைப்பு, யந்திர தகடு களவாடல் சார்பாக நாங்கள் மேற்கொண்ட நடவடிக்கையால் பொலிஸார் கள்வர்களை பிடித்துள்ளதாகவும், நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியுள்ளதாகவும் தகவல் கிடைத்தது.

ஆனால் எனக்கு கிடைத்த தகவலின்படி செல்லக்கதிர்காமர் ஆலயத்தில் உடைக்கப்பட்ட 19 கருங்கல் விக்கிரங்களின் கீழ் உள்ள யந்திர தகடுகள் பொலிஸார் காட்டிய யந்திர தகடுகளை ஒத்தவையாக இல்லை என தகவல் கிட்டியுள்ளதை இச்சபையின் கவனத்துக்கு தருகின்றேன்.

01.இன்று வடமாகாணத்தில் கொடிகாமம், வரணியில் உள்ள 300 ஆண்டுகள் பழைமை வாய்ந்த கண்ணகி அம்மன் ஆலய சிலை களவாடப்பட்டுள்ளது.02.பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயிலில் 150 பவுண்நகைகொள்ளையிடப்பட்டுள்ளது. 03.வண்ணாப்பண்ணை நாச்சிமார் கோயிலில் கொலைஇடம்பெற்றுள்ளது. 04.முல்லைத்தீவு மாவட்ட கொக்குளாய் கொக்குத் தொடுவாய் ஆலய கொள்ளை. 05. மட்டக்களப்பு மாவட்டத்தின் புணாணை விநாயகர் ஆலய விக்கிரக கொள்ளை. உட்பட 26க்கு மேற்பட்ட கோயில்களில் பல கொள்ளை சம்பவங்கள் வடக்கு கிழக்கு மாகாணத்தில் ,டம்பெற்றுள்ளது. ஆனால் ,து சார்பான கண்டு பிடிப்புக்களில் பாதுகாப்பு தரப்பினரோ, அரசாங்கமோ கவனம் செலுத்துவது மிகவும் குறைவாக உள்ளது.

சிங்கள மக்களுடன் ஒன்றாக வாழ்ந்து சிங்கள மக்களின் உதவியுடன் தம்புள்ளையில் வாழ்ந்த தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## சூரியா படத்திற்கு நோ சொன்ன சனா கான்



சூர்யா படத்தில் குத்து பாடலுக்கு நடனம் ஆட மறுத்து விட்டாராம் சனா கான். சிலம்பாட்டம், தம்பிக்கு இந்த ஊரு, ஆயிரம் விளக்கு, ஒரு நடிகையின் டைரி போன்ற படங்களில் நடித்திருப்பவர் சனா கான். இதனைத் தொடர்ந்து தமிழில் பட வாய்ப்புகள் குறைந்ததை அடுத்து பாலிவுட் பக்கம் வாய்ப்பு தேடி சென்றார்.

சல்மான் கான் நடத்தும், பிக் பாஸ் ரியாலிட்டி ஷோவில் பங்கேற்ற சனாவுக்கு பின்னர் சல்மான் தான் நடித்த ஜெய் ஹோ என்ற படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. இதற்கிடையில் தமிழில் லிங்குசாமி இயக்கத்தில் சூர்யா நடிக்கும் படத்தில் குத்து பாடல் ஒன்றில் நடனம் ஆடுவதற்காக சனாவிடம் கால்ஷீட் கேட்கப்பட்டது. இந்தி படத்தில் நடிப்பதை காரணம் காட்டி சூர்யா படத்தில் நடிக்க மறுத்துவிட்டாராம்.

இதுகுறித்து அவர் கூறுகையில், சூர்யா படத்தில் நடிக்க ஆசை தான். ஆனால் சல்மானுடன் நடித்துள்ள ஜெய் ஹோ படம் விரைவில் திரைக்கு வரவுள்ளது. இது எனக்கு பெரிய படம். இப்பட குழுவினருடன் நான் படத்தின் புரமோஷன் நிகழ்ச்சிகளுக்காக வெவ்வேறு ஊர்களுக்கு சென்று கொண்டிருப்பதால் அடுத்த 2 மாதங்களுக்கு என்னால் கால்ஷீட் தர முடியாது. மேலும் குத்து பாடலுக்காக நான் கால்ஷீட் ஒதுக்குவது முடியாத காரியம் என்றும் ஆனால் தமிழில் நிச்சயம் நடிப்பேன் எனவும் கூறியுள்ளார்.

## விஜய்யுடன் ஜோடி சேர ஆசைப்படும் ஹனிரோஸ்



இளையதளபதி விஜய்யுடன் எப்படியாவது நடித்து விட வேண்டும் என்ற ஆசையில் உள்ளாராம் ஹனிரோஸ். மலையாளத்தில் சின்னச் சின்ன ரோலில் நடித்துக் கொண்டிருந்தவர் ஹனிரோஸ்.தமிழில் சிங்கம்புலி படத்தில் ஜீவாவுக்கு ஜோடியாக நடிக்க, அந்தப்படமும் அவரது காலை வாரிவிட்டது. அதைத் தொடர்ந்து மீண்டும் மலையாள சினிமாவுக்கே போன அவருக்கு ராஜகம்பள வரவேற்பு தான். த்ரிவேண்ட்ரம் லாட்ஜ், ஹோட்டல் கலிபோர்னியா, அஞ்சு சுந்தரிகள் என வரிசையாக இவர் நடித்த படங் கள் எல்லாம் ஹிட் அடிக்க மலையாளத்தில் முக்கியமான நடிகையாகிவிட்டார்.அதனால் இப்போது வரிசையாக இளைய தலை முறை இயக்குனர்களின் படங்களால் நிரம்பி வழிகிறதுஹனிரோஸின் கால்சீட் டைரி. மலையாளத்தில் இவ்வளவு பிஸியாக இருக்கும் ஹனிரோஸ் நம்ம இளைய தளபதி விஜய்யின் வெறித்தனமான ரசிகை. எனவே விஜய்யுடன் ஒரு படத்திலாவது நடித்து விட வேண்டும் என்ற தனது ஆசையை தனக்கு நெருங்கிய வட்டாரங்களில் பரப்பி வருகிறாராம்.

## இறுதிகட்டத்தில் இது கதிர்வேலன் காதல்



ரெட்ஜெயன்ட் மூவிஸ் நிறுவனம் சார்பில் உதயநிதி ஸ்டாலின் தயாரித்துள்ள படம் இது கதிர்வேலன் காதல். ஒரு கல் ஒரு கண்ணாடி படத்திற்குப் பிறகு உதயநிதி ஸ்டாலின் ஹீரோவாக நடித்துள்ள இப்படத்தில் அவருக்கு ஜோடியாக நயன்தாரா நடித்திருக்கிறார்.

இந்தப் படத்திற்கு ஹாரிஸ் ஜெயராஜ் இசை அமைத்திருக்கிறார். சுந்தர பாண்டியன் படத்தை இயக்கிய எஸ்.ஆர்.பிரபாகரன் இயக்கியுள்ள இப்படத்தின் ஒரு பாடல் தவிர மற்ற படப்பிடிப்பு எல்லாம் முடிந்து இப்போது படத்தின் டப்பிங் வேலைகளும் முடிந்து விட்டது. மீதமுள்ள பாடல் காட்சியின் படப்பிடிப்பு தற்போது நடந்து வருகிறது. படத்தின் ஓடியோ வெளியீடு மற்றும் படத்தின் ரிலீஸ் திகதிகளை படக்குழுவினர் விரைவில் அறிவிக்க உள்ளனர்.

## ஆர்யா- விஜய்யுடன் ஜோடி சேரும் கார்த்திகா



"கோ" புகழ் கார்த்திகா. தேசிய விருது பெற்ற இயக்குனர் எஸ்.பி.ஜனநாதன் தன்னுடைய அடுத்த படத்திற்கு "புறம்போக்கு" என்று பெயரிட்டுள்ளார். ஆக்ஷன் எண்டர்டெயினராக உருவாகவிருக்கும் இப்படத்தில் முதல் முறையாக ஆர்யாவும், விஜய் சேதுபதியும் இணைந்து நடிக்கவுள்ளனர். மக்கள் தேவைக்காக இருந்த பொது இடமான புறம்போக்கு நிலங்கள் இன்று மெல்ல மெல்ல தனியாரின் ஆக்கிரமிப்புக்கு ஆளாகி வருகிறது. அதைப் பற்றிய பின்னணியைக் கொண்ட சிந்தனை தான் இப்படத்தின் கதைக்களமாம். இப்படத்தை யு.டி.வியுடன், எஸ்.பி.ஜனநாதனின் "பைனரி பிக்சர்ஸ்"-ம் இணைந்து தயாரிக்கவுள்ளது. இதன் முதற் கட்டப் படப்பிடிப்பு வருகிற ஜனவரியில் குலுமணாலியில் துவங்குகிறது. இந்நிலையில் இப்படத்தின் கதாநாயகியாக "கோ" கார்த்திகா ஒப்பந்தமாகியுள்ளார். என்னதான் கதைப்படி ரெண்டு ஹீரோன 'ன ாலும், ஹீரோயின் ஒண்ணுதானாம்.தற்போது கார்த்திகா அருண் விஜய்யுடன் "டீல்" படத்தில் பிஸியாக நடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## கமலை தோற்கடித்த ஏ.ஆர்.ரஹ்மான்



உலக நாயகன் கமல்ஹாசனையே தோற்கடித்துள்ளார் இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான். பிரபல /போர்ப்ஸ் பத்திரிகை ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவின் பிரபலங்களின் பட்டியலை வெளியிடுவது வழக்கம். இந்தப் பத்திரிகை இந்த வருடம் வெளியிட்டுள்ள பட்டியலில் 16-ஆவது இடத்தில் இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் உள்ளார். மேலும் 33ஆவது இடத்தில் நடிகர் சூர்யாவும், 47ஆவது இடத்தில் கமல்ஹாசனும், 49வது இடத்தில் விஜய்யும் உள்ளார். 100 பேர் கொண்ட இந்தப் பட்டியலில் 'பாலிவுட் ஸ்டார்' ஷாருக்கான் முதலிடத்தைப் பிடித்துக்கொண்டு சாதனை புரிந்துள்ளார்.கமலுடன் இணைந்து நிறைய படங்களில் கலக்கிய ஸ்ரீதேவிக்கு 73வது இடம் கிடைத்துள்ளது.

## குத்தாட்டத்துக்குதான் கூப்பிடறாங்க: கவலையில் ப்ரியாமணி



ஹீரோயின் ரோல் மட்டும் கிடைக்கவே மாட்டேங்குது என ஆதங்கத்தைக் கொட்டியுள்ளார் ப்ரியாமணி. பாரதிராஜாவால் அறிமுகப்படுத்தப்பட்டு, பருத்திவீரன் மூலம் தேசிய விருது பெற்ற ப்ரியாமணி தமிழில் கடைசியாக நடித்தது ராவணன் என்ற தோல்விப் படத்தில்தான். அதிலும் அவர் ஹீரோயின் அல்ல. சமீபத்தில் கன்னடத்தில் அவர் நடித்த சாருலதா படத்தை தமிழில் டப்பிங் செய்து வெளியிட்டனர்.

ஆனால் படம் வந்த சுவடே தெரியவில்லை. தற்போது கன்னடம், மலையாளப் படங்களில் நடித்து வருகிறார். தமிழ் படங்களில் நடிக்காதது ஏன் என்று ப்ரியாமணியிடம் கேட்டால், தமிழ் படங்களில் நல்ல கதாபாத்திரங்கள் வரவில்லை என்றும் திறமையை வெளிப்படுத்தும் கதாபாத்திர த்திற்காக காத்துக்கொண்டிருக்கிறேன் எனவும் கூறியுள்ளார். மேலும் சென்னை எக்ஸ்பிரஸ் இந்தி படத்தில் குத்தாட்டம் ஆடியதை தெடர்ந்து நிறைய இந்திப் படங 'களில், குத்தாட்டம் போடவே கூப்பிடுகிறார்கள். நான் ஏற்றுக் கொள்ளவில்லை, நல்ல கதையம்சம் உள்ள படமாக இருந்தால் ஆடுவேன் என்று கூறியுள்ளார்.

## தீபிகாவின் அதிரடி மனமாற்றம்



பாலிவுட்டில் மோஸ்ட் வான்டட் நடிகையாக உருவெடுத்துள்ளார் தீபிகா படுகோனே.

இவர் நடித்த படங்கள் நூறு கோடி வசூலை அள்ளுவதால், நம்பர் ஒன் நடிகையாக வலம் வந்து கொண்டிருக்கிறார். தமிழில் உருவாகும் கோச்சடையான் படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நடிக்கிறார் என்பது யாவரும் அறிந்ததே. இந்த படத்தில் சொந்தமாக டப்பிங் பேச வேண்டும் என்ற தீராத ஆசையுடன் வலம் வந்து கொண்டிருந்தவர், அந்த முடிவை கைவிட்டுள்ளாராம். ஏற்கனவே வெளியான சென்னை எக்ஸ்பிரஸ் படத்தில், தனக்கு தெரிந்த தமிழில் டப்பிங் பேசியிருந்தார். படத்தில் பார்த்தபோது அவர் பேசிய வசனங்கள் தமிழ் ரசிகர்களுக்கு சரியாகப் புரியவில்லை என வருத்தப்பட்டுள்ளாராம். இதுதான் இந்த அதிரடி முடிவுக்கு காரணமாம்.

## 'தலயின்' வீரமான இசை

அஜித் தனது ரசிகர்களுக்கு கிறிஸ்துமஸ் பரிசளிக்கவிருக்கிறார். "ஆரம்பம்" படத்தின் பிரம்மாண்ட வெற்றிக்குப் பிறகு அஜித் நடித்துள்ளப் படம் வீரம். சிறுத்தை சிவா இயக்கத்தில் உருவாகிவரும் இப்படத்தில் "தல"யுடன், தமன்னா, சந்தானம், விதார்த், பாலா, அப்புக்குட்டி என பெரிய நட்ச்சத்திர பட்டாளமே நடித்துள்ளது. தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்திருக்கும் இதன் டீசர்கள் சமீபத்தில் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இந்நிலையில் இதன் ஆடியோ உரிமையை கைப்பற்றிய "ஜங்லீ" மியூசிக் நிறுவனம், வருகிற டிசம்பர் 20ம் திகதி இப்படத்தின் இசையை வெளியீட திட்டமிட்டுள்ளது. விஜயா புரொடக்ஷன்ஸ் சார்பில் திருமதி பாரதி ரெட்டி தயாரித்திருக்கும் இப்படம் வருகிற பொங்கல் ஜல்லிக்கட்டில் "ஜில்லா"வுடன் களமிறங்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.



## த்ரிஷா சம்பளம் ஒரு கோடியெல்லாம் இல்லைங்கோ!

கன்னட படத்தில் நடிக்கும் த்ரிஷாவிற்கு சம்பளம் ஷரூ. 25 லட்சம்தான் என தகவல் வெளியாகியுள்ளது. தெலுங்கில் மகேஷ்பாபு நடித்து சூப்பர்ஹிட்டான 'தூக்குடு' படம் கன்னடத்தில் ரீமேக் செய்யப்படுகிறது. இதில் கதாநாயகனாக நடிப்பவர் கன்னட உலகின் பவர்ஸ்டார் என்று ரசிகர்களால் அன்பாக அழைக்கப்படும் புனீத் ராஜ்குமார். இவருக்கு ஜோடியாக நடிப்பதற்கு த்ரிஷாவை அணுகி பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். இதற்கு ஒப்புக்கொண்ட அவர் சம்பளமாக ஷரூ.1 கோடி வரை கேட்டுள்ளார். ஆனால் கன்னடத்தில் ஒரு படத்தின் பட்ஜெட்டே அவ்வளவுதான். எனவே த்ரிஷாவுக்கு இந்தப் படத்தில் நடிக்க ஷரூ.20 லட்சம் சம்பளம் பேசியுள்ளனர். கன்னடப் பட உலகில் தன் மார்க்கெட் மதிப்பு அதிகமாக வேண்டும் என்றால் முதல் படம் பெரும் வெற்றி பெற வேண்டும். எனவே ஷரூ 25 லட்சத்துக்கு நடிக்க ஒப்புக் கொண்டாராம் த்ரிஷா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுவிட்டரில் Blocking வசதி



பிரபல சமூக வலைத்தளங்களுள் ஒன்றான டுவிட்டர் ஆனது Blocking வசதியினை மீண்டும் அறிமுகப்படுத்துவதாக தெரிவித்துள்ளது. பல மில்லியன் கணக்கான பயனர்களைக் கொண்ட இத்தளமானது 2006ம் ஆண்டு உருவாக்கப்பட்டதுடன் அதிகபட்சம் 140 எழுத்துக் களை கொண்ட குறுஞ்செய்திகள் உட்பட படங்களை நண்பர்களுடன் பகிரும் வசதியை வழங்கி வருகின்றது.

இதேவேளை தேவையற்ற பின்தொடர்பவர்களை நிறுத்தி வைக்கும் வசதியை ஏற்கணவே வழங்கியிருந்த அந்நிறுவனம் பின்னர் இடைநிறுத்தியிருந்தது. எனினும் அவ்வசதியை மீண்டும் அறிமுகப்படுத்தவுள்ளதாக கடந்த வாரம் அறிவித்துள்ளது.

# மிக குறைந்த விலையில் SamSung Galaxy Tab 3

Galaxy Tab 3 டேப்லட் ஆனது தற்போது குறைந்த விலையில் அமேசான் தளத்தில் கிடைக்கிறது.கிறிஸ்மஸ் விடுமுறை தினத்தை முன்னிட்டு 8GB சேமிப்பு கொள்ளளவினைக் கொண்ட இந்த டேப்லட்டினை 99 யூரோக்களுக்கு கொள்வனவு செய்யக்கூடிய வாய்ப்பினை அமேசான் தளம் வழங்குகின்றது.

இந்த டேப்லட் ஆனது 1.2புர்ண வேகத்தில் செயலாற்றவல்ல Processor, பிரதான நினைவகமாக 1 GB RAM



ஆகியவற்றினைக்கொண்டுள்ளது.மேலும் Android 4.1 Jelly Bean இயங்கு தளத்தினை அடிப்படையாகக் கொண்ட இச்சாதனத்தில் 3.15 மெகாபிகசல்களை உடைய பிரதான கமெரா மற்றும் 1.3 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா ஆகியவனவும் காணப்படுகின்றன.

# LG இன் கர்வ்(Curve) மாடல் மொபைல் போன்

LG இன் புதிய கர்வ்(curve) மாடல் மொபைல் போன் 12-12-2013 அன்று வெளிவந்தது நேற்று(12-12-2013) LG வெளியிட்ட கர்வ்(Curve) மாடல் மொபைலான LG G பிளக்ஸ் மொபைல் வழக்கமான மொபைல் போல இல்லாமல் வளைந்து ஸ்டைலாக காணப்படுகிறது.L.G நிறுவனம் ஆப்பிளை முந்திகொண்டு இதனை வெளியிட்டுள்ளது. இதன் முக்கிய features கள்.

மற்ற அனைத்து பிராஸஸரை விட மிக வேகமாக செயல்பட கூடிய 2.26புர்ண quad-core Snapdragon 800 பிராஸஸர்.2.1MP -பிரண்ட் கேமரா மேலும் 4G LTE, 3G, Wi-Fi, Bluetooth 4.0, GPS, மற்றும் NFC என அனைத்துமே இதில் உள்ளது இதன் பேட்டரி திறன் 3500mAh ஆகும் இந்த வகை பேட்டரிகள் அதிக நேரம் சார்ஜ் இருக்கும் வகையில் வடிவமைக்கபட்டுள்ளது. விலை என்ன தெரியுமா?- இதோட தற்போதைய விலை 60 ஆயிரம் தான்.




# iOS சாதனங்களுக்கான புதிய கீபோர்ட் அப்பிளிக்கேஷன்



அப்பிளின் iOS சாதனங்களில் தற்போது காணப்படும் கீபோர்ட் அப்பிளிக்கேஷனை விடவும் இலகுவாகவும், விரைவாகவும் பயன்படுத்தக்கூடிய புதிய அப்பிளிக்கேஷன் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. புதிய வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட Fleksy எனப்படும் இந்த அப்பிளிக்கேஷன் QWERTY அமைப்பிலான கீ பரம்பலைக் கொண்டுள்ளது. இந்த அப்பிளிக்கேஷனை அப்பிளின் iTunes தளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

# Wise Data Recovery: அழிந்த தரவுகளை மீட்க உதவும் மென்பொருள்



கணனி வன்றட்டுக்களில் சேமிக்கப்பட்டுள்ள தரவுகளில் கோளாறுகள் ஏற்படுதல் மற்றும் அழிந்து போதல் போன்றவற்றினால் தரவு இழப்பு ஏற்படுகிறது. இதனை தவிர்ப்பதற்கு Wise Data Recovery எனும் மென்பொருள் உதவுகின்றது. முற்றிலும் இலவசமாகக் கிடைக்கும் இம்மென்பொருளின் மூலம் "Good", "Poor", "Very Poor", மற்றும் "Lost" என்ற அடிப்படையில் தரவுகளை வகைப்படுத்தி மீட்டுக்கொள்ள முடியும். வன்றட்டுக்கள் தவிர பென்டிரைவ், டிஜிட்டல் கமெரா, மெமரி கார்ட் போன்றவற்றிலிருந்தும் அழிந்த தரவுகளை மீறப்பெற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய தொழில்நுட்பத்துடன் அப்பிளின் IWatch

உலகத் தரம் வாய்ந்த ஸ்மார்ட் கைப்பேசிகள் மற்றும் கணனிகளை வடிவமைத்து மக்கள் மத்தியில் நீங்கா இடம்பிடித்த அப்பிள் நிறுவனம் iWatch சாதனங்களையும் உற்பத்தி செய்து அறிமுகப்படுத்தியது.2014ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படும் புதிய iWatch – களை வடிவமைத்து வரும் அந்நிறுவனம் வளைந்ததும், ஒளி ஊடுபுகவிடும் திரைகளைப் பயன்படுத்தலாம் என ஆஷருடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.இப்புதிய தொழில்நுட்பம் காரணமாக மக்கள் மத்தியில் இந்த iWatch – கள் பலத்த வரவேற்பைப் பெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.




**நடைபாதைக் கடையில் கத்தியை வாங்கியிருப்பார்களா அவர்கள்? கேள்வி அவர்களுள் கிளர்ந்த அதே நேரம் ...................**

அக் கடையில் கத்தியை வாங்கியிருந்தால் கத்திக் கொள்வனவிற்கான பற்றுச் சீட்டை அக்கடையில் இருந்து பெற்றுக் கொண்டிருக்க முடியுமா? என்ற கேள்வியும் அவர்களுக்கு எழுந்தது.

அவர்கள் அக்கடையின் உரிமையாளரை பார்த்த போது அவரிடமிருந்து பொதுவாகவே உண்மைத் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் என்ற எண்ணம் எழுந்தது.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்றோர் பழமொழி உண்டு. பொதுவாகவே மனிதர்களின் மனவோட்டத்தை அவர்களின் முகபாவங்களில் இருந்து அறிந்து கொள்ள முடியும். எனினும் தேர்ந்தெடுத்த நடிகர்களாலும், மனதைத் தமது கட்டுக்குள் வைத்திருப்பவர்களாலும் முகபாவத்தைத் தம்மிச்சைப்படி மாற்றிக் கொள்ள முடியும் அவர்களின் மனவோட்டத்தை முகபாவத்திலிருந்து புரிந்து கொள்ளவே முடியாது. தலைசிறந்த அரசியல் தலைவர்கள் பலர் பேச்சில புன்னகையுடன் எப்போதுமே இருப்பதைக்காணலாம். எனினும் சாமானியர்களின் மனவோட்டத்தை முகம் காட்டிக் கொடுத்துவிடும். புலனாய்வாளர்களின் நுண்ணிய புலன் அறிவு தாம் உற்றுப் பார்ப்பவர்களின் நடத்தையை ஓரளவிற்கேனும் புரிந்து கொள்ளக் கூடிய திறன் நிறைந்ததாக இருப்பதைக் காணலாம்.

அந்த அடிப்படையிலேயே கத்திக் கடைக்காரரை உற்று நோக்கிய புலனாய்வாளர் ஒருவர் அவரிடமிருந்து உண்மைத் தகவல்களே வெளிவரும் என்பதைப் புரிந்து கொண்டார். ஆனால்



அக்கடைக்காரரை அணுகி சம்பாசனையைத் தொடங்கிச் சில மணித்துளிகளின் பின்னர்தான் அவர் தான் தங்களால் தேடப்படுபவர் என்பதையும், தமக்குச் சாட்சியாக வரப் போகின்றவர் என்பதையும் புரிந்து கொண்டனர். அதுவரை அவரை ஒரு தகவலாளியாகவே அவர்கள் நோக்கினர்.

புலனாய்வாளர்கள் அக் கடைக்காரிடம் சில விடயங்களைப் பற்றிப் பேசவே எண்ணினர். எனவே அவரை அணுகி நேரடியாகவே விடயத்திற்கு வந்தனர்.

" நாங்கள் புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர்கள்" என அறிமுகப் படுத்தியவுடனேயே அக்கடைக்காரரிற்கு பொறி தட்டியது.

" ஓம் சேர்"

நேர்மையான அந்த மனிதனின் பேச்சு சற்றுத் தடுமாறத் தொடங்கியது. அதனைப் புலனாய்வாளர்கள் புரிந்து கொண்டனர்.

"ஏன் இந்தத் தடுமாற்றம்?" அவர்களின் புலனுணர்வு விழித்துக் கொண்டது.

"நாங்கள் நடந்த கொலையொன்றுக்காக சில தகவல்களைத் திரட்ட வந்திருக்கின்றோம்"

"தெரியும் சேர்"

புலனாய்வாளர்களுக்கு மிகவும் தேவையான பதில்....... ஆனால் அவர்கள் எதிர்பார்க்காத நபரிடமிருந்து வெளியே விழுந்தது.

"என்ன தெரியும் உங்களுக்கு"

" எனக்கு அந்த இரண்டு பேரில ஒருத்தனத் தெரியும்"

இந்தப் பதிலை அவரிடமிருந்து பெற்றுக் கொண்டதும் புலனாய்வாளர்கள் அவரை மேலும் விசாரிக்க வேண்டியிருப்பதைப் புரிந்துகொண்டனர்.

"ஐயா...கொஞ்சம் அங்கால போய்க் கதைப்பமா?" அக்கத்திக் கடைக்காரரின் முகம் பெரும் வேண்டுதலுடன் புலனாய்வாளர்களின் முகத்தை நோக்கியது. புரிந்து கொண்டனர் புலனாய்வாளர்கள்..... " இல்லை...உங்களை நாங்கள் கைது செய்து கொண்டு போகப் போறதில்லை.. எங்களை நம்புங்கோ...இது சாதாரண விசாரணைக்குத்தான்...கடையில நிண்டு செய்தால் உங்கட கஸ்டமர்ஸ் வந்து குழப்பிக்கொண்டு இருப்பினம்.... அதுதான் அங்கால கொஞ்சம் தள்ளி நிண்டு கதைப்பம்...."

அக்கடையிலிருந்து முன்புறமாக பேருந்துத் தரிப்பிட கட்டிடங்களுக்குள் உரு கட்டிடத்திற்கு அவர்கள் நகர்ந்து கொண்டார்கள்....

"சொல்லுங்கோ.....என்னெண்டு தெரியும்"

"சேர்... அவன் என்னெட்டத்தான் வந்து கத்தி வாங்கிக் கொண்டு போனவன்"

"அவன என்னெண்டு உங்களுக்கு இப்பவும் ஞாபகம் இருக்கு



"அவங்கள நான் டிவில பாத்தனான்... பாத்தோன்னயே ஞாபகம் வந்திட்டு"

"என்னெண்டு உங்கட கடையிலதான் கத்தி வாங்கினவன் எண்டு சொல்றீங்க"

"கத்தி வாங்கின அடுத்த நாள் கொலை நடந்திட்டு...எனக்கு அதால தான் நல்ல ஞாபகம் இருந்தது. அந்தஅண்டு கத்தி வாங்கேக்கயே எனக்கு அவன்ல ஒரு சந்தேகம் இருந்தது........ அதால தான் அவனை நான் வடிவா ஞாபகம் வச்சிருக்க முடிஞ்சது"

புலனாய்வாளர்கள் இருவரும் அக் கணத்தில்தான் கத்திக் கடைக்காரரையும் ஓர் சாட்சியாக்க முடியும் எனப் புரிந்து கொண்டனர்.

எனினும் அக்கத்திக் கடைக்காரருக்கும் அந்தக் கொலைக்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்குமோ? என்ற சந்தேகமும் அப்போது அவர்களுக்கு எழுந்தது.

ஆனால் அந்தச் சந்தேகம் நீண்ட நேரம் அவர்களுக்கு நிலைக்கவே யில்லை. கொலைக்கு உடந்தையாக இருப்பவர்கள் கொலைச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டவுடன் தப்பியோடும் நோக்கில் தமதிடத்தை விட்டு நகர்ந்திருப்பார்கள். அல்லது ஏதாவது மாறாட்டம் செய்திருப்பார்கள். ஆனால் இந்தக் கத்திக் கடைக்காரரோ புலனாய்வாளர்களுக்காக் காத்திருந்தவர் போல பதிலளிப்பதும்... தன்னை இக்கொலைச்சம்பவத்தில் எவ்விடத்திலும் சந்தேகபடக்கூடாது என்பதில் தெளிவாக இருப்பதிலும் இருந்தே அவர் இக் கொலையுடன் சம்பந்தப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது.

எனவே சாமானியமாகக கேட்கும் கேள்வியொன்றை அவரிடம் அவர்கள் கேட்டனர்.....

அக் கேள்வியால்.... (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஒரேபார்வையில் சச்சின் - ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து சச்சின் டெண்டுல்கர் ஓய்வு!



இந்திய கிரிக்கெட் அணியின் சாதனை வீரரான சச்சின் டெண்டுல்கர் ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருக்கிறார். கடந்த 23 ஆண்டுகளாக இந்திய அணியில் நீடித்து வரும் டெண்டுல்கரின் அண்மைய ஆட்டங்கள் கடும் விமர்சனத்துக் குள்ளாகியிருந்தது. இதனால் அவர் ஓய்வுபெற வேண்டும் என்ற குரலும் வலுத்தது. இந்தியா வந்துள்ள பாகிஸ்தான் அணியுடன் ஒருநாள் போட்டிகள் நடைபெற இருக்கின்றன.

இதற்கான அணித் தேர்வு இன்று மும்பையில் நடைபெறுகிறது. இந்நிலையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கும் டெண்டுல்கர், ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற முடிவு செய்திருப்பதாக தெரிவித்திருக்கிறார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. இதனை கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் உறுதி செய்திருக்கிறது. இதுவரை மொத்தம் 463 ஒருநாள் போட்டிகளில் விளையாடியிருக்கும் சச்சின் 18, 426 ரன்களைக் குவித்திருக்கிறார். ஒருநாள் போட்டிகளில் உலக அளவில் அதிக ரன்களைக் குவித்தவர் என்ற பெருமை சச்சினுக்கு உண்டு.

## விம்பிள்டன்: ஆடவர் சாம்பியன் ஆண்டி மர்ரி - 77 ஆண்டுகளின் பின் பிரித்தானியாவின் கனவு நனவானது



விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளின் ஆடவர் பட்டத்தை பிரிட்டனின் ஆண்டி மர்ரி வென்று சாதனை படைத்துள்ளார். இறுதிப் போட்டியில் அவர் செர்பியாவின் நோவாக் யாக்கோவிச்சை 6-4,7-5, 6-4 எனும் நேர் செட்களில் வென்றார். பிரிட்டனைச் சேர்ந்த ஒருவர் விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளில் பட்டத்தை வெல்வது கடந்த 77 ஆண்டுகளில் இதுவே முதல் முறை.

முதல் இரண்டு செட்களிலும் வென்ற ஆண்டி மர்ரி மூன்றாவது சுற்றிலும் எளிதாக வென்றுவிடுவார் என்கிற நம்பிக்கை அவரது ரசிகர்களிடையே இருந்தது. எனினும் மூன்றாவது செட்டையும் அதன் மூலம் சாம்பியன் பட்டத்தையும் அவர் போராடியே வெல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

உலக ஆடவர் தரப்பட்டியலின் முதலிடத்தில் இருக்கும் நோவாக் யாக்கோவைச்சுக்கும், இரண்டாம் இடத்தில் இருக்கும் ஆண்டி மர்ரிக்கும் இடையேயான மூன்றாவது செட் மிகவும் பரபரப்பாக இருந்தது. ஒரு கட்டத்தில் மூன்றாவது செட்டில் இருவரும் 2-2 எனும் கணக்கில் இருந்தனர். பின்னர் அந்த செட்டின் போக்கு யார் வேண்டுமானாலும் வெற்றி பெறலாம் எனும் சூழலை ஏற்படுத்தியது.

அதிலும் குறிப்பாக 5-4 எனும் கணக்கில் முன்னிலை வகித்த மர்ரி வெற்றியில் விளிம்புக்கு சென்று சென்று திரும்பினார். மூன்றாவது செட்டின் ஆறாவது ஆட்டத்தில் ஆண்டி மர்ரி 40-0 எனும் கணக்கில் முன்னணியில் இருந்தாலும், யாக்கோவிச் மீண்டு வந்து 40-40 க்கு எனும் சமநிலையை ஏற்படுத்தினார். பின்னர் அந்த ஆட்டத்தின் வெற்றி யாருக்குச் செல்லும் என்று கணிக்க முடியாத நிலையை ஏற்படுத்தியது.

உலகில் ஆடவர் பட்டியலில் முதல் இரண்டு இடத்திலுள்ள ஜோக்கோவிச் மற்றும் மர்ரி அரங்கத்தில் குழுமியிருந்த பிரிட்டனின் பிரதமர் டேவிட் கேமரன் உட்பட பலர் மிகுந்த எதிர்பார ்ப்புடன் கூடிய ஏக்கத்தில் இருந்ததை தொலைக்காட்சிகள் காட்டின.

இறுதியாக ஆண்டி மர்ரி பிரிட்டி' மக்கள் மற்றும் ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் விம்பிள்டன் சாம்பியன் பட்டத்தை வென்றார்.

இது ஆண்டி மர்ரியின் இரண்டாவது பெரிய வெற்றியாகும். 26 வயதான அவர் கடந்த ஆண்டு அமெரிக்கன் ஓபன் டென்னிஸ் பட்டத்தை வென்றார். இவற்றைவிட, கடந்த ஆண்டு ஒலிம்பிக் டென்னிஸ் போட்டிகளிலும் அவர் தங்கம் வென்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று விம்பிள்டன் பகுதியில் 40 டிகிரிக்கும் அதிகமாக வெப்பம் நிலவிய சூழலில், 15,000 ரசிகர்கள் மத்தியில் இந்தப் போட்டி மூன்று மணிக்கும் கூடுதலான நேரம் நடைபெற்றது.

அகில இங்கிலாந்து டென்னிஸ் சங்கத்தால் நடத்தப்படும் இந்தப் போட்டியில் 1936 ஆம் ஆண்டு ஃபிரெட் பெரி பட்டத்தை வென்ற பிறகு, பிரிட்டனைச் சேர்ந்த ஒருவர் விம்பிள்டன் பட்டத்தை பெறுவது இதுவே முதல் முறை.

அவரது வெற்றியை அடுத்து பிரிட்டனின் பல பத்திரிகைகளிலும் கொண்டாட்டங்களை இடம்பெற்றன.

## கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான கிரிக்கட் போட்டியில் மட்டக்களப்பு மாநகரசபை சம்பியன்



கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையில் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பு மாநகரசபை வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தினை தனதாக்கிக் கொண்டது. கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இந்த சுற்றுப்போட்டி நடைபெற்றது.

இந்த சுற்றுப்போட்டியில் கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் உள்ள பிராந்திய உள்ளூராட்சி அலுவலகம் மற்றும் மாநகர.நகரசபை ஆகியவற்றின் அணிகள் மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் அணி என்பன பங்குகொண்டன.

இதன் ஆரம்ப நிகழ்வில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் உதயகுமார் உட்பட உள்ளூராட்சி ஆணையாளர்களும் கலந்துகொண்டனர்.

ஆறு ஓவர்களைக்கொண்ட இந்த கிறிக்கட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் மட்டக்களப்பு மாநகர அணியும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்கள அணியும் மோதின.

இதன் போது முதலில் துடுப்பெடுத்தாடிய கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்கள அணி ஆறு ஓவர்களில் நான்கு விக்கட்டுகளை இழந்து 48 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு மாநகர அணியினர் ஒரு விக்கட்டுகளை இழந்து 51 ஓட்டங்களைப்பெற்று வெற்றிவாகை சூடினர்.

இறுதியில் வெற்றி பெற்றவர்களுக்கான வெற்றிக்கிண்ணங்கள் வழங்கப்பட்டதுடன் இறுதிப்போட்டியின் சிறந்த வீரராக மட்டக்களப்பு மாநகரசபையினை சேர்ந்த சோதிராஜா தெரிவுசெய்யப்பட்டார்.

## மெதடிஸ்த மத்திய கல்லூரி தொடர்பான செய்திகளை பெற குறுஞ்செய்திச்சேவை



மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் தகவல்களை பெறும் வகையில் குறுந்தகவல் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அண்மையில் நடைபெற்ற மெதடிஸ்த மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க இராப்போசன ஒன்றுகூடல் நிகழ்வின்போதே இந்த குறுஞ்செய்திச்சேவை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

மெதடிஸ்த மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க. செயலாளர் வை.கோபிநாத் இதனை ஆரம்பித்து வைத்தார்.

மெதடிஸ்த மத்திய கல்லூரியின் நிகழ்வுகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் உடனுக்குடன் அறிவிக்கும் வகையில் இந்த குறுஞ்செய்தி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்சன் மண்டேலா நமக்கு விட்டுச்சென்ற மரபுரிமைப் பேறு

-சாந்தி சச்சிதானந்தம்-



**மக்கள் ஜனநாயக முன்னணி 16.12.13 அன்று ஏற்பாடு செய்த நெல்சன் மண்டேலா ஞாபகார்த்தக் கூட்டத்தில் ஆற்றிய உரை:-**

இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கிக் கொண்டிருக்கும் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் திரு மனோ கணேசன் அவர்களே, மற்றும் இங்கு பேச்சாளர்களாக வந்திருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் திரு இரா சம்பந்தன் அவர்களே, திரு பி.பி.தேவராஜ் அவர்களே, சபையில் அமர்ந்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களே, சபையோரே, அனைவருக்கும் எனது தாழ்மையான வணக்கங்கள்.

கடந்த அறுபதாண்டுகளுக்கும் மேலாக எமது நாட்டில் ஒரு விடுதலைப் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருக்கும் காரணத்தினால் நாமெல்லோரும் தென்னாபிரிக்க மக்களின் இனவெறிக்கெதிரான விடுதலைப் போராட்டத்தில் அக்கறை கொண்டிருக்கின்றோம். ஆயினும், இரண்டு போராட்டங்களையும் ஒப்பிட்டு நோக்கையில் பலவிதமான அபிப்பிராயங்கள் தெரிவிக்கப் படுகின்றன. தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் அனுபவித்த ஒடுக்குமுறை மிகக் கொடூரமானது என்கின்றனர். அங்கு அவர்கள் விரும்பிய இடத்தில் குடியமர முடியாது, அரசாங்கம் ஒதுக்கிய காணிகளில் (Reserves) மட்டும்தான் வசிக்கலாம்ளூா வினைத்திறன் மிக்க தொழில்கள் அவர்களுக்கு வழங்கப்படுதல் சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட்டிருந்தால் தபால் அலுவலகம், உணவகம், பேருந்து என இப்படி எந்தப் பொதுவிடங்களிலும் வெள்ளையினத்தவரோடு ஒன்றாக உட்கார முடியாது, ஒரே சேவையைப் பெற முடியாது. இதனுடன் ஒப்பிட்டால் எங்கள் நாட்டின் ஒடுக்கப்பட்ட சிறுபான்மையின மக்களின் நிலைமை எவ்வளவோ சிறந்தது என்பர்.

ஆனாலும், தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் அந்நாட்டின் பெரும்பான்மையின மக்களாக இருந்தது அப்போராட்டத்திற்கு ஒரு பாரிய அனுகூலத்தினைத் தந்தது. அதே சமயம், எங்கள் நாட்டிலோ இங்குள்ள சிறுபான்மையின மக்கள் 75வீத சனத்தொகை கொண்ட பெரும்பான்மை இனத்தவருக்கு எதிராகத் தமது போராட்டத்தினை மேற்கொள்ள வேண்டியதாக இருக்கின்றது. அந்த வகையில் நோக்கினால், நாம் இங்கு எதிர்நோக்கும் சவால், தென்னாபிரிக்க மக்கள் எதிர்நோக்கிய சவாலுக்கு கிட்டத்தட்ட சமமானதேயெனக் கொள்ளலாம். இக்காரணத்தினால் அவர்கள் எமக்குக் கற்றுத் தரும் பாடங்கள் பெறுமதி மிக்கவையாகின்றன. இதனால்தான், நெல்சன் மண்டேலா தலைமை தாங்கிய கறுப்பினத்தவருடைய விடுதலைப் போராட்டம் எமக்கு விட்டுச் சென்ற டநபயஉல எனப்படும் மரபுரிமைப் பேறாக இருக்கும் கொள்கைகளைப் பகுத்துப் பார்ப்பதாக நிகழ்த்தப்படும் இந்தக் கூட்டத்தினை மிக முக்கியமானதொன்றாகக் கருதுகின்றேன்.

நெல்சன் மண்டேலாவைப் பற்றிப் பேசும்போது, தென்னாபிரிக்க மக்களின் சுதந்திரத்தினைப்பெற்றுத் தந்த தனிப்பெரும் தலைவராகத்தான் அவரை நோக்கத் தலைப்படுகின்றோம். இதே போலத்தான், மகாத்மா காந்தி இந்தியாவுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்தார் என்கிறோம். ஆனால் இத்தகைய தலைவர்களுக்குப் பின்னணியில் பாரிய சமூக அரசியல் சக்திகள் செயற்பட்டதை மறந்து விடுகின்றோம். அவற்றை இயக்கிய ஆயிரக்கணக்கான மக்களின்றி இந்தச் சுதந்திரம் ஏது? தென்னாபிரிக்க மக்களின் சுதந்திரப் போராட்டத்தினை நெறிப்படுத்துவதில் நெல்சன் மண்டேலா அவர்கள் எவ்வளவு செல்வாக்குச் செலுத்தினாரோ அவ்வளவுக்கு அவர் காலத்தில் தொழிற்பட்ட சமூக அரசியல் சக்திகள் நெல்சன் மண்டேலா என்கின்ற மாமனிதரை உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றன. இதனால் நெல்சன் மண்டேலாவினை, இந்தப் பின்னணியில் வைத்து இந்தப் பின்புலத்தினைக் கொண்டுதான் ஆராய முடியும். அந்த வகையில் பார்க்கும்போது, இலங்கையில் வாழும் எமக்கு அவர் தலைமை வகித்த போராட்டம் கற்றுத் தந்த பாடங்கள்தான் என்ன?

தென்னாபிரிக்க மக்களின் போராட்டத்தின் பன்முகத்தன்மையே (Diversity) அது எமக்குக் கற்றுத் தரும் முதலாவது பாடமாகும். அந்நாட்டில் கறுப்பின மக்களைத் தவிர coloureds என்று அழைக்கப்படும் கறுப்பு வெள்ளைக் கலப்பின மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களுடன் கணிசமான அளவில் இந்தியர்கள் வசித்தனர். இதே போன்று ஸோஸா சுலு உள்ளிட்ட நூற்றுக்கணக்கான இனக்குடிகள் இருந்தனர். இந்த ஒவ்வொரு இனக்குழுமமும் தமக்கே உரித்தான அமைப்புக்களையும் சமூகக் கட்டமைப்புக்களையும் கொண்டியங்கி வந்தன. இதற்கு உதாரணமாக இந்தியர்களின் சார்பில் இயங்கிய இந்திய தேசியக் காங்கிரஸினையும், கலப்பின மக்களின் சார்பில் இயங்கிய தென்னாபிரிக்க நிறக்கலப்பு மக்களின் அமைப்பினையும் (South African Coloured Peoples Organization) முற்போக்கு வெள்ளையினத்தவர்களின் அமைப்பாகிய ஜனநாயகவாதிகளின் காங்கிரஸ் (Congress of Democrats) போன்றவற்றைக் காட்டலாம். தென்னாபிரிக்காவின் வெள்ளையின அரசாங்கத்தினால் ஏதோவொரு முறையில் ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்பட்ட இம்மக்களின் பிரதிநிதித்துவத்தினை நெல்சன் மண்டேலாவின் ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸ் தன்னுடன் இணைத்துக் கொண்டது. அது மட்டுமல்லாது, தொழிற்சங்கங்கள், கம்யூனிஸ்ட் சோ'லிஸ்ட் கட்சிகள், பெண்கள் இயக்கங்கள், மாணவர் இயக்கங்கள், இளைஞர் அமைப்புக்கள் போன்ற பல்வேறு சமூகம் சார்ந்த இயக்கங்களையும் சேர்த்துக்கொண்டது. இதில் குறிப்பாக பெண்கள் இயக்கங்கள் தோன்றிய வரலாறு சுவாரசியம் மிக்கதாகும். கறுப்பின மக்கள் வாழ்ந்த சேரிகளில் அத்தொழிலாளர்களுக்கு சாராயம் உற்பத்தி செய்து விற்கும் தொழில் அச்சமூகத்தின் பெண்கள் மேற்கொண்ட தொழிலாகும். சகல இடங்களிலும் இலாபம் ஈட்டுவது போதாதென சாராய விற்பனையிலும் கைவைக்கப் புகுந்தது தென்னாபிரிக்க அரசாங்கம். வீடுகளில் சாராயம் உற்பத்தி செய்வதைத் தடை செய்து, சகலரும் நகராட்சி மன்றங்களினால் நடத்தப்படும் மண்டபங்களில்தான் சாராயம் வாங்க வேண்டும் என்று கட்டளையிட்டது. பெண்களின் பிரதான வருமானம் ஈட்டும் தொழில் பறிபோனதன் காரணமாகத்தான் பெண்கள் முதன்முதலில் வீதிக்கு இறங்கினார்கள். இவ்வாறு ஒவ்வொரு மக்களும் தத்தமது நலன்கள் குறித்து இயங்குவதன் மூலம் ஒரு பொது வேலைத்திட்டத்திலும் தம்மை இணைத்துக் கொண்டனர். ஒரு பரந்துபட்ட மக்கள் போராட்டம் மலருவதற்கு இது அடித்தளமாகியது.

இவ்வாறு சகல சமூகங்களையும் இணைத்துக் கொண்டதில் பிரச்சினைகள் இல்லாமலில்லை. ஏனையோரெல்லாரும் வெளிநாட்டவர்கள் என்பதனால் கறுப்பின ஆபிரிக்க மக்கள் சார்பில் மட்டுமே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவேண்டும் என வாதாடியவர்களும் ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸில் இருந்தனர். கடைசியில் இந்தக் குழவினர் பிரிந்து அனைத்து ஆபிரிக்கக் காங்கிரஸ் ( Pan African Congress) என்கின்ற பெயரில் இயங்க ஆரம்பித்தனர். ஆனால், இந்தப் பிரிவினையின் போதுகூட சகல மக்களையும் ஒரு கூட்டமைப்பில் இணைப்பதில் ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸ் தலைவர்கள் உறுதியாக நின்றனர். அதற்காக அனைத்து ஆபிரிக்கக் காங்கிரஸினை அவர்கள் நிராகரிக்கவில்லை. அவர்களுடனும் இணைந்து இயங்கினர். இவர்களின் இந்த மூலோபாயத்தின் வெற்றி, தென்னாபிரிக்க அரசாங்கம் அந்நாட்டின் சகல மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு என்கின்ற ரீதியில் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸினையே பேச்சுவார்த்தைக்கு அழைத்தபோது கடைசியில்தான் உலகுக்குப் புலனாகியது. தென்னாபிரிக்க மக்களின் போராட்டத்தின் தலைமையணியாக அது உத்தியோகபூர்வமாக உலகத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அது மட்டுமன்றி, ஒவ்வொரு மக்கள் குழுமத்தினதும் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாய் அது தனது உரித்துடைமையைத் (Legitimacy). தேடிக்கொண்டது. ஓர் மக்கள் போராட்டத்திற்குத் தலைமை வகிக்கும்பொழுது எந்த அரசியல் சக்தியும் அதற்கான உரித்துடைமையையும் தான் உழைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் இது எமக்குக் கற்றுத் தரும் பாடமாகும்.

ஆனால் இன்று தமிழர் அரசியலில் எமது போராட்டங்களில் பன்முகத்தன்மை அவ்சியம் என்பதை மறந்து "ஒற்றுமை" என்கின்ற ஒரேயொரு விடயத்தைத்தான் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம். அன்றிலிருந்து இன்றுவரை ஒரு சிலரால் நடத்தப்படும் ஒரேயொரு கட்சிக்குப் பின்னாலேதான் நிற்கின்றோம். ஒற்றுமை என்பது ஒரே அமைப்பாக இருப்பதல்ல, மாறாக, வேறுவேறு நலன்களைக் குறித்து இயங்கும் அமைப்புக்கள் ஒரு பொது குறிக்கோளுக்காக ஒன்றிணைவதாகும். இதைவிட வேறொரு ஒற்றுமையும் உலகில் கிடையாது. தொழில், பிரதேச, மத, சாதீய அடிப்படையில் பாதிக்கப்படுகின்ற மக்களின் பல்வேறு நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தமிழ் மக்களது போராட்டம் இருக்கின்றதா எனக் கேட்டால் இல்லையென்றுதான் சொல்ல வேண்டி நேரும்.

எந்தப் போராட்டத்திற்கும் தெளிவான மூலோபாயம் அவசியம் என்பதுதான் நெல்சன் மண்டேலாவின் தலைமையிலான தென்னாபிரிக்க மக்கள் போராட்டம் நமக்குக் கற்றுத் தரும் இரண்டாவது பாடமாகும். தென்னாபிரிக்காவில் 1950களில் சாத்விகப் போராட்டங்கள் தோல்வியில் முடிவடையவே 1960களில் ஆயுதந்தாங்கிய போராட்டத்தினை ஆரம்பித்தது ஆபிரிக்க தேசிய காங்கிரஸ். இதன் காரணமாக மிகக் கொடூரமான ஒடுக்குமுறையைச் சந்தித்தது. நெல்சன் மண்டேலாவுக்கு ஆயுட் தண்டனை விதிக்கப்பட்டது. அவர்களுடைய ஒவ்வொரு இரகசிய பாதாள கட்சிக் கலங்கள் யாவும் துவம்சம் செய்யப்பட்டன. முக்கிய தலைவர்கள் யாவரும் நாட்டை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று. ஆயுதக்குழுக்கள் கலைக்கப்பட்டன. அத்துடன், தென்னாபிரிக்காவைச் சுற்றியுள்ள நாடுகளான றொடீசியா அங்கோலா மொசாம்பிக் போன்றவை காலனித்துவ அரசாங்கங்களின் பிடியில் இருந்ததனால் அவை இவர்களுக்குப் பாதகமாகத்தான் செயற்பட்டன. இந்நிலையில்தான், உள்ளூரிலும் வெளியூரிலும் நிலைகொண்டிருந்த தலைவர்கள் யாவரும் ஒன்று கூடி மேற்கொண்ட பரந்து பட்ட கலந்தாய்வுகளின் பயனாக அடுத்த தசாப்தங்களில் மக்கள் போராட்டம் எவ்வாறு முன்னெடுக்கப்பட வேண்டும் என்கின்ற மூலோபாயம் வகுக்கப்பட்டது. இம்மூலோபாயம் மக்கள் போராட்டத்தைத் தாங்கும் நான்கு தூண்களாக வர்ணிக்கப்பட்டது.

இங்கு முதலாவது தூணானது, ஒத்துழையாமை நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வெகுசன இயக்கங்களை அணி திரட்டுவதாகும். கறுப்பின மக்களுக்கு விதிக்கப்பட்ட பாஸ் நடைமுறை, அவர்களின் நிலவுரிமையை நிராகரிக்கும் காணிச் சட்டங்கள், அவர்களின் சுதந்திர நடமாட்டத்தைக் கட்டுப்படுத்திய அநீதியான சட்டங்கள் போன்றவை மக்கள் போராட்டத்திற்கான நுழைவுப் புள்ளிகளாகப் பார்க்கப்பட்டன. இரண்டாவது தூணானது, ஆயுதப் போராட்டத்தினை மக்கள் போராட்டத்துடன் சமாந்திரமாகக்

- தொடரும் -

- நன்றி -
உலகத் தமிழ் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிதம்பரத்தின்
# ஒப்பரேசன் காதிலை பூ



இலங்கை மீதான இந்தியாவின் எல்லை தாண்டிய பேரினவாத நடவடிக்கைகளின் முக்கிய நிகழ்வு 1987இல் ஒப்பரேஸன் பூமாலைஎன்னும் பெயரில் அரங்கேறியது. அதன் பின்னரான இந்தியாவின் ஒவ்வொரு நடவடிக்கையும் நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

**இலங்கை விட்டாலும் இந்தியா விடாது**

2002-ம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை தமிழர்களுக்கு கொடுக்க முன்வந்த போது அது இந்தியாவில் உள்ள அதிகாரப் பரவலாக்கத்திலும் பார்க்க அதிகமாக இருந்த படியால் இந்தியப் பேரினவாதிகள் வெகுண்டெழுந்தனர். அப்போதைய இலங்கைத் தூதுவராக இருந்த நிருபாமா ராவ் விரைந்து செயற்பட்டார். ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி கலைக்கப்பட்டது. இந்திய விரோத கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனையையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் இந்திய முயற்சியால் கூட்டணிகளாக இணைக்கப்பட்டன. மஹிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராக்கப்பட்டார். பின்னர் ரணில்-பிரபா உடன்படிக்கையை மீறி தமிழர்கள்மீது மோசமான இனவழிப்புப் போர் கட்டவிழ்த்து விடப்பட்டு முள்ளிவாய்க்கால் வரை இன அழிப்புத் தொடர்ந்தது.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போரில் இந்தியாவின் பங்கு பற்றி தமிழ்நாட்டில் வாழ் தமிழர்களுக்கு சரியான தகவல்2011-ம் ஆண்டு வரை முழுமையாகப் போய்ச்சேரவில்லை. முத்துக்குமாரனின் தற்கொடை உட்படப் பலரின் தற்கொடைகள் திராவிடக் கட்சிகளின் ஊடகங்கள் உட்படப் பல ஊடகங்கள் திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்த 2011இல்நடந்த தமிழ்நாடு சட்ட சபைக்கான தேர்தலின் போதுதான் தமிழ் ஈழத்தில் நடந்த இனக்கொலை தொடர்பான உண்மைகள் ஓரளவிற்குதமிழ்நாட்டு மக்களைப் போய்ச் சேர்ந்தது. சட்டசபைத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி படு தோல்வியைச் சந்தித்தது.

2014-ம் ஆண்டு மே மாதம் அல்லது அதற்கு முன்னதாக இந்தியாவின் பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் நடக்க விருக்கின்றது. அதில் காங்கிரசுக் கட்சி தமிழ்நாட்டில் ஒரு தொகுதியிலும் வெற்றி பெற மாட்டாது என்பதை2011இல் நடந்த சட்ட சபைத் தேர்தல் கட்டியம் கூறிவிட்டது. காங்கிரசுக் கட்சியுடன் கூட்டணி அமைக்க பல கட்சிகள் தயக்கம் காட்டுகின்றன. தமிழ்நாட்டில் காங்கிரசுக் கட்சி ஒரு தீண்டத் தகாத கட்சி ஆகிவிட்டது. காங்கிரசின் தலைமைப் பீடத்தைப் பொறுத்த வரை தமிழ்நாடு தவிர்ந்த மற்ற மாநிலங்களில் காங்கிரசுக் கட்சிவெற்றி பெற்றால் தமிழ்நாட்டில் எந்தக் கட்சி வெற்றி பெற்றாலும் அது காங்கிரசுக் கட்சியின் வெற்றியே. எந்தக் கட்சி வெற்றி பெற்றாலும் தேவைப்படும் நேரத்தில் ஒரு சில அமைச்சுப் பதவிகளைக் கொடுத்து அவற்றை தம்முடன்இணைத்து ஒரு கூட்டணி அரசை அமைத்துவிடலாம்.

ஆனால் தமிழ்நாட்டில் இருக்கும்காங்கிரசு அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை அவர்களின் அரசியல் இருப்பை உறுதி செய்ய அவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றே ஆக வேண்டும். அதிலும் ப சிதம்பரம்காங்கிரசுக் கட்சியில் ஓர் உயர் மட்டத் தலைவராகும். தற்போது சோனியா காந்தி, ராகுல் காந்தி, மன் மோகன் சிங் ஆகியோருக்கு அடுத்த படியான தலைவர் ப சிதம்பரம். அடுத்த இந்தியப் பொதுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றால் மட்டுமே தான் தலைமை அமைச்சர் பதவியை ஏற்பேன் என ராகுல் காந்தி உறுதிபடக் கூறிவிட்டார். இந்தப் பாராளுமன்றத்துடன் மன் மோஹன் சிங் அரசியலில் இருந்து ஓய்வு பெறப்போகின்றார். இதனால் ப.சிதம்பரம் அடுத்த இந்தியத் தலைமை அமைச்சராக வரும் வாய்ப்பு இருக்கின்றது. இதற்கு அவர் தமிழ்நாட்டில் வெற்றி பெற வேண்டும். இதற்காக அவர் புதுச்சேரித் தொகுதியில் போட்டி போட முயற்ச்சி செய்தார். அதற்கு அந்தப் பிராந்திய காங்கிரசுக் கட்சியினரிடம் வரவேற்பில்லை.

மேற்படி சூழலில்தான் சிதம்பரம் ஒரு இலங்கைப் பிரச்சனை தொடர்பாக ஒரு மாநாட்டைக் கூட்டினார். அதில் அவர் தமிழர்களின் காதில் பூச்சுற்றினார்.

**பூச்சுற்று - 1 :**

இலங்கையில் நடந்தது இனக்கொலை. 2009-ம் ஆண்டு இலங்கையின் இறுதிப் போரின்போது மனித உரிமை மீறல்கள்நடந்ததாகக் கூறி அதைக் கண்டிக்கும் தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கழகத்தில் ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானம் கொண்டு வந்தபோது அதை இந்தியா இலங்கைக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் தீர்மானமாக மாற்றிய போது சிதம்பரம் இந்திய அமைச்சரவையில் இருந்தார். இந்தியப் பாராளுமன்றத்தில் பொதுவுடமைவாதி ராஜா இலங்கையில் இனப்படுகொலை நடந்தது என ஆற்றிய உரையை சிதம்பரத்தின் காங்கிரசுக் கட்சியினர் கடுமையாக எதிர்த்து அதை அவைக்குறிப்பில் (ஹன்சார்ட்) இருந்து நீக்கினர்.

சிதம்பரத்திற்கு திராணி யிருந்தால் இதைப் இந்தியப் பாராளமன்றத்தில் அல்லது ஏதாவது ஒரு வட இந்தியத் தொலைக்காட்சியில் இலங்கையில் நடந்தது ஓர் இனக்கொலை எனச்சொல்லட்டும். மே 17 இயக்கத் தலைவர் திருமுருகன் காந்தி இலங்கையில் நடந்த இனக்கொலைக்கு ப.சிதம்பரமும் உடந்தை என்பதற்கு தன்னிடம் ஆதாரம் இருப்பதாகச் சொல்கிறார். இது பற்றி தன்னுடன் விவாதத்திற்கு வரும்படி சிதம்பரத்திற்கு சவாலும் விடுத்துள்ளார். சவாலைச் ஏற்றுக் கொள்ளவில்லை.

**பூச்சுற்று - 2 :**

சிதம்பரத்தின் இராசதந்திர நடவடிக்கைகளால் தான் டேவிட் கம'ரூன் இலங்கைக்கு எதிராக நடந்து கொண்டார்.

இதுதான் மொட்டந்தலைக்கும் உள்ளங்காலுக்கும் முடிச்சுப் போடுவது. ஆனால் சிததமபரத்தின் அமைச்சரவை சகாவான சல்மான் குர்ஷித் இலங்கையில் போரின் போது நடந்தவற்றிற்கு எந்த ஒரு பன்னாட்டு விசாரணையும் தேவையில்லை என்கிறார். அவர்களது கமலேஸ் ஸர்மா இலங்கையின் இராசதந்திரக் கைக்கூலி போல் செயற்படுகின்றார்.

**பூச்சுற்று - 3 :**

இந்தியத் தலைமை அமைச்சர் யாழ்ப்பாணம் போய் தமிழ்த் தலைவர்களைச் சந்திப்பார். உங்கள் தலைமை அமைச்சரே ஒரு தலையாட்டிப் பொம்மை என உலகத்தால் விமர்சிக்கப்படும் ஒருவர். அவர் யாழ் போவதால் எந்த ஒரு நன்மையும் ஏற்படப்போவதில்லை ஐயா.

**பூச்சுற்று □ 4 :**

தமிழர்களுக்கு உரிமை கிடைக்கும் வரை காங்கிரசு ஓயாது. 1987இல் தமிழர்களை நீங்கள் உங்கள் படைக்கலன்களை ஒப்படையுங்கள் நாம் இனி உங்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதம் என்றது காங்கிரசின் ஆட்சி.

அதன்பின்னர் மூன்று இலட்சத்திற்கு மேலான தமிழர்கள் கொல்லப்பட்டபோது காங்கிரசு தூங்கிக் கொண்டிருந்தாலும் பரவாயில்லை முன்னின்று அந்தக் கொலைகளுக்கு உதவியது. உங்கள் 13வது திருத்தம் 26 ஆண்டுகளாக நடை முறைப்படுத்தப படவில்லை. 26 ஆண்டுகாலம் ஓய்வெடுத்தீர்களா கோமாவில் இருந்தீர்களா?

**பூச்சுற்று - 5:**

மனித உரிமை மீறியவர்களை இலங்கை தண்டிக்க வேண்டும். முதலில் இலங்கைக்கு அமைதிப் படை என்ற போர்வையில் சென்று அங்கு போர்க் குற்றம் புரிந்தவர்களை நீங்கள் முதலில் தண்டியுங்கள்.

**பூச்சுற்று - 6 :**

காங்கிரசால் மட்டுமே இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற முடியும். காங்கிரசு ஆட்சியில் இருந்த போது அதன் உதவியுடன் தான் இலங்கையில் மூன்று இலட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டனர். இந்தியாவின் போரைத்தான் நாம் செய்தோம் என்றார் இலங்கை அதிபர்.

இந்தியாவில் தென் மண்டலத்தின் உள்ள பார்ப்பன, மலையாளிக் கும்பல்களும் உங்களது கட்சியினரும் தான் தமிழர்களின் பரம விரோதிகளாக இருந்தார்கள் இப்போது அவர்களுடன் இலங்கையில் முதலீடு செய்த இந்தியப் பெரும் பணக்காரர்களும் இணைந்து கொண்டார்கள். ஆகையால் உலகெங்கும் உள்ள தமிழர்கள் இந்தியாதான் தமிழர்களின் முதலாம் எதிரி என்பதை உணர்ந்து கொண்டார்கள்.

**பூச்சுற்று - 7 :**

சிதம்பரம் இறுதிப் போரை இந்தியா நிறுத்த முயன்றது அதை வேறு நாடுகள் தடுத்துவிட்டன என்கிறார். ஆனால் உண்மையில் நடந்தது தலைகீழானது. திருமுருகன் காந்தி இதையும் தன்னால் நிரூபிக்க முடியும் என்கிறார்.

முதல் கக்கூசு கட்டிக் கொடு

சிதம்பரத்திற்கு எதிர்ப்பு தமிழர் தரப்பில் இருந்து வந்ததிலும் பார்க்க சிங்களத்தரப்பில் இருந்து அதிகம் கிள்ம்பியுள்ளது. சிங்கள அமைச்சர் ஒருவர் சிதம்பரத்தை கடுமையாக விமர்சித்து நீ முதலில் உனது நாட்டு மக்களுக்குப் போதிய அளவு கழிப்பறைகளைக் கட்டிக் கொடு பிறகு இலங்கையைப் பற்றிப் பேசு என முகத்தில் அடித்தால் போல சொல்லிவிட்டார். ஆனால் இந்திய வெளியுறவுத் துறை இதுபற்றி மௌனமாக இருக்கிறது. பாவம் சிதம்பரம்.

**சிதம்பரத்தின் நடவடிக்கை வெறும் தேர்தல் தந்திரம் மட்டுமல்ல.**

கனடா, பிரித்தானியா, மொரிஸியஸ் ஆகிய நாடுகள் இலங்கை தொடர்பாக தமது வெளிநாட்டுக் கொள்கையை மாற்றி விட்டன. அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையும் முன்பு போல் இல்லை. அமெரிக்காவும் பிரித்தானியாவும் இணைந்து ஒரு நாட்டுக்கு எதிராகநடவடிக்கை எடுத்தால் அதற்குப் பல நாடுகள் ஆதரவு அளிக்கும். ஒஸ்ரேலியா நியுசிலாந்து போன்ற நாடுகளும் இதில் அடங்கும். சீனா தான் உலக அரங்கில் மனித உரிமை மீறும் நாடுகளின் காவலன் என்ற் பிம்பத்தை அழிக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளது. தான் உலகின் முதன்மை நாடாக மாறுவதற்குஇது அவசியம் என்பதை சீனா உணர்ந்துள்ளது. ஆதாலால் இலங்கையை எல்லாக் கட்டதிலும் சீனா பாதுகாக்க மாட்டாது. இவற்றால் பன்னாட்டு அரங்கில் இலங்கைக்கு எதிரான ஒரு கருத்துப் பரவலாகிக் கொண்டு போகின்றது. பல மனித உரிமை அமைப்புக்கள் இலங்கையைத் தண்டிக்காவிட்டால் அதன் வழியை மற்ற ஆட்சியாளர்கள் பின்பற்றுவார்கள் என நினைக்கின்றன. இதனால் இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் இரு விடயங்களால் கலங்கிப் போய் உள்ளனர். ஒன்று இலங்கை விவகாரம் இந்தியாவின் கையை மீறிப் போய் விடப் போகிறது. இரண்டாவது இலங்கையில் நடந்த போர் தொடர்பாக ஒரு பன்னாட்டு விசாரணை வந்தால் அதில் இந்தியாவின் பங்களிப்பு அம்பலமாகும். விஜய் நம்பியார், சிவ் சங்கர மேனன், எம் கே நாராயணன் ஆகியோரின் பங்கு வெளிவரும். இதை தவிர்ப்பதற்கு சிதம்பரத்தினூடாக இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் முயல்கின்றனர். இது நம்ம ஏரியாநாம் எமது ராஜிவ்-ஜே ஆர் ஒப்பந்தத்தின் படி இலங்கைப் பிரச்சனையைத் தீர்க்கிறோம் அதை எங்களிடம் விட்டு விடுங்கள் என உலக நாடுகளிடம் இந்தியா சொல்லப் போகிறது. ஆனால் இந்தியாவைச் சுற்றி உள்ள எல்லா நாடுகளிலும் இந்திய வெளியுறவுக் கொள்கை பிழையாகிப்போனதை எல்லா நாடுகளும் உணர்ந்துள்ளன.

நன்றி - ஒருபேப்பர் (இணையம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு முதல்வரின்.....

கிழக்கு மாகாண முதலமைச்சரால் கல்குடா வலய கல்விப் பணிப்பாளருக்கே சிங்கள மொழி மூலமான பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. இதனை இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளை கண்டித்துள்ளது. கல்குடா வலயக் கல்விப் பணிப்பளருக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிங்கள மொழி மூலம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளதைச் கண்டித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளை செயலாளர் பொ. உதய'ரூபன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"கிழக்கு மாகாண முதலமைச்சர் ஆசிரியரொருவரின் இடமாற்றம் தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளரின் ஆங்கில மொழிமூல அறிவுறுத்தல்களுக்கு கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளருக்கு சிங்கள மொழிமூலம் பணிப்புரையை வழங்கியிருப்பது இலங்கை சனநாயக சோசலிசகுடியரசின் தாபன மற்றும் சட்டவாட்சிக்கு முரணானதாகும்.

சிறுபான்மை இன சுயநிர்ணய கோட்பாட்டையும் 13 ஆவது அரசியலமைப்பின் திருத்தச் சட்டத்தையும் அங்கீகரித்துள்ள சங்கம் 2009.09.25ஆம் திகதிய 1620-27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மற்றும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 7.:.2007 (i).2010.09.30 ம் திகதி 1651-20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி 1980.06.11அன்று இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட மனிதஉரிமை பிரகடனத்தின் உறுப்புரை (I), உறுப்புரை (II), இன் குடியியல் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயங்களின் சட்ட கோட்பாடுகளை மீறுவதாக இச் சிங்கள மொழி மூல அறிவுறுத்தல் காணப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தின் கல்வி அமைச்சர், அமைச்சின் செயலாளர் ஆகியோர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாகவிருந்தாலும் அரச கடிதங்கள் அனைத்தும் தமிழ் மொழியிலே அனுப்பப்படுவதையிட்டு இலங்கை ஆசிரியர் சங்கம் மகிழ்ச்சியடைகிறது.

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் தெளிவாக்கப்பட்டுள்ள மொழிக் கொள்கையை கிழக்கு மாகாண முதலமைச்சர் கவனத்தில் கொள்ளாதது கவலையளிக்கிறது. மனித உரிமைகளை மேம்படுத்தலும், பாதுகாத்தலும் என்பது அரசியலமைப்பு நாடு தன்னார்வத்துடன் பொறுப்பேற்றுக் கொண்ட சமவாயங்கள் கடப்பாடுகள் என்பவற்றின் குறித்த ஏற்பாடுகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கத்தின் ஓர் அடிப்படை கடப்பாடகவும் அமைகின்றது என்பதை கிழக்கு மாகாண முதலமைச்சர் கருத்திற்கொள்ள வேண்டும்" என அந்த அறிக்கையில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வார உரைகல்..........

இக்குற்றச்சாட்டை சந்தேகமற நிரூபிக்க முடியாமற் போகவே ஆசிரியர் விடுவிக்கப்பட்டார். இவ்வழக்கு ஓர் சோடிக்கப்பட்ட பொய்யான வழக்கு எனக் கூறியுள்ள புவி தனக்கு மனித உரிமை மீறல் நிகழந்துள்ளதாக கொழும்பிலுள்ள மனித உரிமைக் கண்காணிப்பகத்தில் முறையிட்டுள்ளார். முறைப்பாட்டை ஏற்றுக்கொண்டுள்ள கண்காணிப்பகம் இம் முறைப்பாடு தொடர்பான விசாரணையை மட்டக்களப்பிலுள்ள தனது கிளைக்காரியாலயத்தின் ஊடாக நிறைவேற்றவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

## தாக்குதல்...........

கோரிய பதாதைகளைத் தாங்கிய வண்ணம் அமைதி வழி அறப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததைப் பொறுத்துக் கொள்ள முடியாத பெரும்பான்மையினர் அவர்களைத் தாக்கிக் கலைத்துள்ளனர்.

இத்தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ள சனநாயகத்திற்கான இலங்கைச் சட்டவாளர் அமைப்பு ''இத்தாக்குதலில் ஆழமாகக் கருத்திற்கொள்ள வேண்டிய விடயம் யாதெனில் தண்டனைக்குரிய குற்றத்தை ஆற்றும் இக் குற்றவாளிகள் காவல்துறையினர் பார்த்துக்கொண்டிருக்க பெரும்பாலான மக்களின் முன்நிலையிலேயே இக் குற்றங்களை நிகழ்த்துவதுதான்'' என மேலும் அறிக்கையிட்டுள்ளது.

மேலும் குற்றவாளிகளின் கைது தொடர்பாக அறிக்கையிட்டுள்ள இந்த அமைப்பு "இக் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு ஏற்றவகையில் படங்களும் சலனப்படங்களும் இலத்திரனியல் ஊடகங்களில் வெளியாகியுள்ள, தாக்கியவர்கள் எவரையும் கைது செய்யாதிருக்கும் காவல்துறை தற்போதும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது என்றே தனது பேச்சாளர் ஊடாக அறிவித்துள்ளது" எனத் தெரிவித்துள்ளது.

## எமக்கு நியமனம்.....

தங்களது பட்டக்களின் வலிவுத் திகதி பொது நிர்வாக உள் நாட்டு அலுவல்கள் அமைச்சு வழங்கிய காலக் கெடுவுக்குள் இருப்பதாகவும் அவ்வாறு இருந்த போதிலும் தமக்கான நியமனங்கள் தொடர்பில் உறுதியான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

அம் மாணவர்களைச் சந்தித்த கிழக்கு மாகாணசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் மா.நடராசா இவ் விடயம் தொடர்பாக மேல் நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## தமிழ் தேசியக்.............

பட்டது. புலிகளை அழித்த கையோடு நாமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. போர் முடிவடைந்த பின்னர் முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வளிக்கப்பட்டது போல இவர்களையும் கைதுசெய்து நீதிமன்றில் நிறுத்தி புனர்வாழ்வு அளித்திருக்க வேண்டும். பயங்கரவாதத்துக்கு துணை போக மாட்டார்கள் என்றும், ஈழம் அமைக்க முயற்சிக்கமாட்டார்கள் என்றும் கூட்டமைப்பிடம் அரசு உறுதிமொழி ஒன்றைப் பெற வேண்டும்.

## ஏனெனில் யேசுவின்...

அவதரிப்பு நிகழ்ந்தது. அவரும் தன்னுடன் கொண்டுவந்த செய்தியினால் இம்மை, மற்றும் மறுமை வாழ்வுகளைப் பற்றி சிந்தித்து அதனில் அர்த்தம் எதுவும் காணாத மக்களாகிய எம்மை, தானே உயிர்தெழுந்து, தம்முடனேயே எம்மையும் அழைத்துச் செல்வேன் என வாக்குத் தந்துள்ளார். அவ்வாக்கினாலேயே நாமும் இம்மை மற்றும் மறுமை வாழ்வினை நிரந்தரமாகக் கருதாமல் மற்றொரு நிலையான வாழ்வு கிடைக்கும் என்று நம்பி வாழ்கின்றோம்

அதுவே எமது மகிழ்ச்சிக்குக் காரணம். அதுவே இன்றைய நாளில் உலகெங்கும் பொங்கும் மகிழ்ச்சிக்கும் காரணம்.

எனவே அந்நாளில் மலைமுரசின் வாசகர்களும், மக்களும் மகிழ்வைக் கொண்டாடுவதுடன் துாரநோக்கையும் நினைவிற் கொள்ளவேண்டும் என வாழ்த்துகின்றேன் என அவர் மேலும் வாழ்த்துச் செய்தியில் தெரிவிததுள்ளார்..

## சுசந்த விடுதலை........

பெப்ரவரி மாதம் 11ம் திகதி நடைபெற்ற ஊர்வலம் ஒன்றில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இரத்தினபுரிப் பாராளுமன்ற அங்கத்தவரான நாலந்த எல்லாவல மற்றும் அவரது சாரதி ஜெயசேன ஆகியோரைச் சுட்டுக் கொன்றதாக சந்தேகத்தின் அடிப்படையில் அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சுசந்த புஞ்சிநிலமே உட்படப் பலருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அதற்குக் கண்கண்ட சாட்சியாக தற்போதைய அமைச்சரும் அப்போதைய ஐ.தே.க உறுப்பினருமான அமைச்சர் டிலான் பெராராவும் ஒருவராகப் பெயரிடப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அனைத்து சந்தேகநபர்களுக்கும் எதிராகத் தொடரப்பட்ட குற்றங்களிலிருந்து அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## கிழக்கிற்கு சிவிலியன்.....

நிலைகொண்டுள்ள பதின் நான்கு ஆயர்களுடன் இணைந்து அதிவண. பேராயர் மல்கம் கார்டினல் ரஞ்சித் அவர்களாலும் ஒப்பம் இடப்பட்டுள்ள கடிதத்திலேயே இவ் அவசர வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அனைவரும் இறந்தவர்களை நினைவு கூறும் உரிமையைக் கொண்டுள்ளனர் என்பதை வலியுறுத்தியுள்ள அக்கடிதத்தில் போரினால் இறந்த அனைவரையும், அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், நினைவுகூறுவதற்குப் பொதுவான நாளொன்றை அரசு அறிவிக்க வேண்டும் என்றும் அக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

மேலும் அபிவிருத்தி சார்ந்த நடவடிக்கைகளில் ''மனிதனை அபிவிருத்திப் பொருள் ஒன்றாகக் கருதாமல் அவனே அவ்வபிவிருத்தியின் ஆசான்" எனக் கருதப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள "திவிநெகும" திட்டமானது கோலோச்சிக் கொண்டிருக்கும் அரசின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் ஆபத்தைக் கொண்டிருப்பது போலிருப்பதாக தெரிவித்துள்ள ஆயர்கள் திவிநெகும திட்டமூலத்தை அரசியல் தலையீடு அற்ற திட்டமாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

## திருமலையில் நெல்சன் மண்டேலா அவர்களின் நினைவு நாள்

மலைமுரசு, நகர லியோ கழகம் மற்றும் "கூத்தாடிகள்" அமைப்பு ஆகியன இணைந்து திருகோணமலையில் மறைந்த பெருந் தலைவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான தென்னாபிரிக்க முன்னாள் சனாதிபதி மதிப்பிற்குரிய நெல்சன் மண்டேலா அவர்களின் நினைவு நாளைக் கடைப்பிடிக்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன. எதிர்வரும் 28ம் திகதி மாலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் இளையோர் பாடசாலை அரங்கில் நிகழவுள்ள இந்நினைவு கூறலில் நினைவுச் சொற்பொழிவுகள். கவிதைகள் போன்றன இடம்பெறவுள்ளன. அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

## கிழக்கில்............

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இவ்வரவு-செலவுத்திட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களின் ஆலோசனைகளை பெறாமல் தயாரிக்கப்பட்டதாகவும், மக்கள் பணிக்காக இவ்வரவு-செலவுத்திட்டத்தில் நித ிஒதுக்கீடு செய்யப்படாமல் பிரதேச சபையை நிர்வகிப்பதற்கே கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் குற்றம் சாட்டினர்.

அத்தோடு சபையின் அனுமதியினை பெறாமல் காரைதீவு நூலகத்திற்கு தவிசாளர் தன்னிச்சையாக முடிவெடுத்து புத்தகங்களை கொள்வனவு செய்துள்ளார் எனவும் குற்றச்சாட்டுக்களை சுமத்தினர்.

அதனைத் தொடர்ந்து பாதீட்டுக்கு ஆதரவாக உரு வாக்கும் எதிராக நான்கு வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் பாதீடு தோல்வியடைந்தது.

இதேவேளை கிழக்கில் த.தே.கூவின் கட்டுப்பாட்டிலுள்ள உள்ளூராட்சி சபைகளில் முதலாவது பாதீட்டுத் தோல்வியை த.தே.கூ சந்தித்துள்ளது.

வடக்கில் ஏற்கனவே மூன்று பிரதேசசபைகளில் பாதீடு தோல்வியுற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காணமற்..........

பேசும் மக்களினது முறைப்பாடுகள் வெறுமனே 5,900 ஆக உள்ளது. பெரும்பாலான தமிழ் மக்கள் இவ் ஆணைக்குழுவிற்கு அறிக்கையிடுவதைப்பற்றிக் கிஞ்சித்தேனும் சிந்திக்கவில்லை என கிராம சபைத் தலைவர் ஒருவர் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

இவ்வாணைக்குழுவானது தன்னால் திரட்டப்பட்ட தகவல்களை மேல் நடவடிக்கைக்காக அற்ரோணி ஜெனரல் திணைக்களத்திடம் வழங்கவுள்ளது.

அத்திணைக்கள அலுவலர்களே மேல் விசாரணைகளை ஒவ்வொரு காணாமற் போனோர் தொடர்பாகவும் மேற்கொள்வர்.

## சிறப்புரிமை............

அமைச்சின் குழுநிலை விவாதத்தின் போது கிழக்கு பல்கலைக் கழகத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைக் குழுவொன்றை நியமிக்குமாறு கோரியிருந்தேன். அதனைத் தொடர்ந்து உபவேந்தரால் கூட்டப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் எனது உரைபற்றிப் பல்வேறு விடயங்களை அவர் தெரிவித்திருப்பதுடன், எனது உரையை ஆற்றும் முன் நான் உபவேந்தருடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

எனது கைகளில் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிரதிநிதிகள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலொன்று உள்ளது.

அதனடிப்படையில் அம் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினரான எனக்கு இவ்விடயத்தைப் நாடாளுமன்றில் பேசச் சகல உரிமையும் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இச் சிறப்புரிமை மீறல் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு இவ்விடயத்தை ஆற்றுப்படுத்துவதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பெற்றோர்களே ! ஸாலிஹான பிள்ளைகளை உருவாக்குங்கள்

பெரியவர்களுடனும் ஆசிரியர்களுடனும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும். என்ற முறைகளை நம் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள்.

ஆல்குர் ஆனுடன் அதிக தொடர்பினை ஏற்படுத்துங்கள். ஒரு நாளைக்கு ஆகக் குறைந்தபட்சம் அரை ஜுஸுவையாவது ஓதக்கூடிய வழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். மஃரிப் தொழுகைவுடன் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னால் அமர்ந்து விடாது.

பெற்றோராகிய நாமும் பிள்ளைகளுடன் சேர்ந்து அல்குர் ஆனை ஓதக் கூடியவராக மாற வேண்டும். குறிப்பாக பிள்ளைகள் விடயத்தில் தொலைக்காட்சிப் பெட்டியை கண்ணுங் கருத்துமாய் உபயோகிக்க வேண்டும்.

சிறிய துஆக்களைப் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும் ஒவ்வொரு செயலையும் செய்யும் போது அவற்றை ஞாபகப்படுத்தி பாடம் கேற்க வேண்டும். இவ்வாறு செய்வதனால் நாளடைவில் இவை வழக்கத்தில் வந்து விடும்.

அதோடு விட்டு வாசங்களிலும் கண்ணாடியின் ஒரு முலைகளிலும். மலசல வாசல்களிலும், சமயலறைகளிலும் அவை ஒவ்வொன்றுக்குரிய துஆக்களைப் பெற்றோர்களாகிய நாம் அறபியில் அல்லது தமிழ் வடிவில் எழு தி ஒட்டி வைக்க வேண்டும். அதனைப் பார்க்கக் கூடிய பிள்ளைகள் நிச்சயம் அதனை ஓதுவார்கள். (தொடரும்)

## பெண் உரிமை

தொடர்ச்சி..

இந்த வகையில் அன்னை சுமையா அவர்கள் முதல் தியாகியாகி கருதப்படுகிறார்கள். இஸ்லாமிய யுத்தங்களில் கூட பெண்கள் முஸ்லிம் வீரர்களுக்கு பணியாற்றக் கூடியவராகவும் காயப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க கூடியவராகவும் காணப்பட்டுள்ளார்கள் இவற்றிலிருந்து பெண்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள் என்பது தெளிவாகின்றது.

இஸ்லாம் பெண்களின் சுதந்திரத்தையும் உரிமையையும் அடக்கி ஒடுக்கி வந்த மார்க்கம் அல்ல, அது பெண்களை பல்வேறு விடயங்களில் ஆண்களுக்கு நிகராக வைத்து நோக்கியுள்ளது. வேறு சில விடயங்களில் பெண்களின் உள, உடல் ரீதியான பலவீனங்களை கருத்திற்கொண்டு அவர்களின் கடமைகளையும் உரிமைகளையும் இஸ்லாம் கட்டுப்படுத்தியுள்ளது.

முதலாவதாக இஸ்லாம் பெண்ணை ஆணைப் போன்று ஒரு மனிதப் பிறவியாக கருதுகின்றது. ஆணுக்கும் போன்றே ஆத்மா பெண்ணுக்கும் உண்டு.

(தொடரும்)

## அல்குர் ஆனில் காணப்படும் கணித அதிசயங்கள்

### ஆச்சரியம் ஆனால் உண்மை இதுதான் சத்திய வேதம்.

நூற்றாண்டு காலமாக பல பிரதிகள் பிரதி பண்ணப்பட்ட போதிலும் எவ்வித மாற்றமுமின்றி இருக்கும் ஒரே ஒரு நூல் என்றால் அது புனித அல்குர்ஆன் மாத்திரம் தான். இஸ்லாம் தான் தூய மார்க்கம் என்று விளங்கிக் கொள்வதற்கு இது ஒன்றே போதுமானதாகும்.

அல்குர்ஆனில் பிரமிக்கத்தக்க விடயங்கள் பல சொல்லப்பட்டுள்ளது. அவை இன்று நவீன விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்படுகின்றன. இவ்வாறு அல்குர்ஆனில் கணிதத்துடன் தொடர்புபட்ட அதிசயிக்கத்தக்க சில அம்சங்களைப் பார்ப்போம்.

**அல்குர்ஆனின் அமைப்பு பின்வருமாறு அமைந்துள்ளது.**

பகுதிகள்-30, ஸூராக்கள்-116, ஆயத்துக்கள்-6666, சொற்கள்-77701, எழுத்துக்கள்-323671, இனி இதன் பிரிவை நோக்குவோம்.

1) நாள் என அல்குர்ஆனிலே 365 தடவையும் நாட்கள் என 30தடவையும் மாதம் என 12 தடவையும் கூறப்பட்டு ள்ளது.

2) உலகம், என்ற சொல்லும் மறுமை என்ற சொல்லும் சரி சமனாக 115 தடவைகள் சொல்லப்பட்டுள்ளது.

3) அதேபோல் ஷைத்தான்: மற்றும் மலக்குகள் என்ற சொற்களும் ஒவ் வொன்றும் 88 தடவை குறிப்பிடப்பட் டுள்ளது.

4) சுவர்க்கம் 77தடவையும் நரகம் எனும் சொல் 77தடவையும் காணப் படுகின்றன.

5) தீயோர் என்ற சொல் 3தடவையும் நல்லோர் என்ற சொல் இருமடங்காக 6தடவையும் சொல்லப்பட்டுள்ளது.

6) "சோதனை" "நன்றி" என்னும் சொற்கள் ஒவ்வொன்றும் சம அளவில் 75 தடவைகள் கூறப்பட்டுள்ளன.

7) "அன்பு" "வழிபாடு" என்ற சொற்கள் ஒவ்வொன்றும் 38 தடவை குறிப்பிடப் பட்டுள்ளன. இன்றைய விஞ்ஞானிகளால் நிற மூர்த்த விகிதம் 23:23 என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் அல்குர் ஆனில் 1400 வருடங்களுக்கு முன்னரே அதனை பற்றி சொல்லியிருக்கின்றது.

8) "சூரியன்" என்றும் "ஒளி' என்ற சொல்லும் 33தடவைகள் சொல்லபட்டு ள்ளது.

9) தொழுகை(சலாத்) என்ற சொல் 5தடவை உபயோகிக்கப்ட்டுள்ளது.

10) கடுமை, கஸ்டம், பொறுமை ஆகிய சொல் ஒவ்வொன்றும் 115 தடவை காணப்படுகின்றன.

11) "ஸகாத்" பறக்கத் என்ற சொல் 32 தடவைகள் காணப்படுகிறது.

12) மனிதன் என்ற சொல் 65 தடவை காணப்படுகிறது. மனிதனின் பிறப்புக்கு காரணமாய் இருக்கும் அனைத்தினதும் கூட்டு தொகையின் மொத்தம் இதற்கு சமனாய் உள்ளது. மண்-17- இந்திரியத்துளி- 12- கரு-6- சனதகட்டி- 03 எழும்புகள்- 15, சதை-12 ஆக மொத்தம் = 65

13) நிலம் என்ற சொல் 13 தடவையும் "கடல்" எனும் சொல் 32 தடவையும் காணப்படுகின்றது. (மொத்தம்45) 13/45/28888 தற்கால விஞ்ஞானிகளினால் அறிவிக்கப் படுகின்ற நிலம் கடல் ஆகி யவற்றின் மிக சரியான விகிதம் இது வாகும்.

படித்ததும் அறிந்ததும் அறிவித்ததும்.






## அழகாக இருக்க ஆசையா?

✸ பச்சைப் பயறை அரைத்து, முகத்தில் தேய்த்து, சிறிது நேரம் கழித்து, கழுவி விடுங்கள். இரண்டு வாரம் இதைச் செய்தால், முகத்தில் இருக்கும் ரோமங்கள் உதிர்ந்து விடும்.

✸ நல்லெண்ணெயில், மருதாணி இலையை போட்டு நன்றாக காய்ச்சி, அதில், ஒரு மூடி எலுமிச்சம் பழத்தை பிழிந்து, கலந்து, மயிர்கால்களின் இடுக்குகளில் நன்றாக தேய்த்து, ஊறவைத்து, பின் சீயக்காய் தேய்த்து அலச வேண்டும். இவ்வாறு, தொடர்ந்து வாரத்தில் இரண்டு, மூன்று நாட்கள் செய்து வந்தால், பொடுகு நீங்கி விடும்.

✸ தூளாக்கிய ஆரஞ்சு பழத்தோல், ஒரு தேக்கரண்டி ஓட்மீல், சிறிது பன்னீர், கிளிசரின் கலந்து, முகத்தில் தேய்த்து, பத்து நிமிடம் ஊற விட்டுக் கழுவுங்கள். இப்படி செய்தால், முகத்தில் உள்ள பழைய இறந்த செல்கள் நீங்கி, முகம் பளிச்சென்று இருக்கும்.

✸ மஞ்சள் தேய்த்து குளியுங்கள். இதனால், பலவித பயன்கள் உண்டு. வியர்வை நாற்றம் போகும் முகத்தில், ரோம வளர்ச்சியும் இருக்காது.

✸ ஆரஞ்சு பழச்சாறு, உளுந்துமாவு, முள்ளங்கி சாறு தலா, ஒவ்வொரு தேக்கரண்டி அளவு எடுத்து, குழைத்து, கண் புருவம் தவிர, முகத்தின் அனைத்து பகுதிகளிலும் பூசவும் தொடர்ந்து, பதினைந்து நாட்கள் பூசி வந்தால், முகம் பளிச்சென மாறும்

### அடர்த்தியான முடிவளர புதினா கண்டிசனர்

**தேவையான பொருட்கள்:** 3 டம்ளர் தண்ணீர், ஒரு பாத்திரம் நிறைய புதினா இலைகள். **செய்முறை:** சிறிது புதினா இலைகளை 2-3 டம்ளர் தண்ணீரில் கொதிக்க வைத்து வடி கட்டி குளிர வைக்கவும். இந்த தண்ணீரை, ஷாம்பு குளியலுக்கு பிறகு ஊற்றி அலசினால் தலைமுடி புத்துணர்ச்சி பெறும்.

## செயற்கை இமை ரோமங்கள்

நீளமான தடிமனான கண் இமை ரோமங்களின் மீது ஆவலாக உள்ளதா?

அப்படியானால் கண்களுக்கு கொஞ்சம் நீட் சியை பயன்படுத்தலாம் அது தான் செயற்கை இமை ரோமங்கள். இவைகள் பார்ப்பதற்கு செயற்கையானது தான் என்பதை சுலபமாக கண்டுபிடித்து விடலாம்.

ஆனால் நீண்ட தடிமனான கண் இமை ரோமங்களின் மீது அதீத காதல் கொண்டிருந்தால் இதனை நீங்கள் பயன்படுத்தலாம்.

இந்த செயற்கை இமை ரோமங்கள் அனைத்து அழகுசாதன கடைகளில் கிடைக்கும். மேலும் பல வகைகளிலும் கிடைக்கும். பெண்கள் பரவலாக பயன் படுத்தும் முறையென்பதால் நாமும் பாவித்துப் பார்க்கலாமா????

## நகம் கடிக்கும் பழக்கத்தை முதலில் நிறுத்துங்கள்



நகத்தை கடிப்பதாலோ அல்லது நகத்தில் உள்ள அழுக்கை முரட்டுத் தனமாக எடுப்பதாலோ நக நுனிகளில் முறிவு ஏற்படும். நாளடைவில் நகமே உடைந்து விழுந்து விடும். அதே போல் சிலருக்கு நகத்தை வைத்து எதையாவது சுரண்டும் பழக்கம் இருக்கும். சில பெண்கள் இதை பயத்தினால் செய்வதுண்டு. இது நகத்தின் மேல் கோடுகள் போல் தோற்றத்தை உருவாக்கி விடும். நகத்தின் அழகு முகத்தில் தெரியுமோ????

### நீங்கள் வெள்ளை.. ஆனால் அக்குள் கறுப்பா???

- கற்றாழையின் ஜெல்லை அக்குளில் தடவி மசாஜ் செய்து, 1 மணிநேரம் ஊற வைக்க வேண்டும். இப்படி இரண்டு நாட்களுக்கு ஒரு முறை செய்து வந்தால், நிச்சயம் அக்குள் கருமை நீங்கும்.
- எலுமிச்சையில் ப்ளீச்சிங் தன்மை இருப்பதால், இதன் சாற்றினைக் கொண்டு, கருமையான அக்குளை மசாஜ் செய்து கழுவ வேண்டும். இதனால் அக்குள் கருமை மறையும். ஆனால் உணர்திறன் சருமம் உள்ளவர்கள், எலுமிச்சையை பயன்படுத்தக்கூடாது. இதனால் எரிச்சல் ஏற்படுவதோடு, சருமம் மேலும் பாதிக்கப்படும்.
- ரோஸ் ஒரு அருமையான நறுமணமிக்க மலர். அத்தகைய மலரின் இதழ்களை அரைத்து அக்குளில் தடவி, 1 மணிநேரம் ஊற வைத்து கழுவ வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் படிப்படியாக கருமை மறையும்.
- மஞ்சளுக்கு சருமத்தின் கருமையை போக்கும் தன்மை அதிகம் உள்ளது. ஆகவே மஞ்சளை தண்ணீரில் கலந்து பேஸ்ட் போல் செய்து, சருமத்தில் தடவி ஊற வைக்க வேண்டும். குறிப்பாக இந்த முறை உணர்திறன் சருமத்திற்கு ஏற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரிவுரையாளர் திருமதி சங்கரநாராயணனுக்கு கலாபூசணம் விருது



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவனக விரிவுரையாளர் திருமதி. சங்கரநாராயணன் அவர்களுக்கு கலாபூசணம் விருது கிடைத்துள்ளது.

அவர் இசைத்துறைக்காற்றிய சேவைகளுக்காகவே அரசின் உயர் விருதுகளில் ஒன்றான இவ்விருது வழங்கபபட்டுள்ளது.



## ஆலையடிவேம்பில் பிரதேச மட்டத் தொழிற்சந்தை

(உ.உதயகாந்த்)

உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சு, மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் தொழில் உருவாக்கல், மேம்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் என்பன இணைந்து பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடாத்திய மாபெரும் பிரதேசமட்ட தொழிற்சந்தை பிரதேச செயலாளர் வேதநாயகம் ஜெகதீசன் தலைமையிலும் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.தமீம் ஏற்பாட்டிலும் இன்று காலை 9.00 மணி முதல் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பி.எச்.பியசேன கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டு தேசிய கொடியேற்றி இத்தொழிற் சந்தையை ஆரம்பித்துவைத்து உரையாற்றியதுடன் பிரதேச செயலாளரும் இவ்வாரம்ப வைபவத்தில் சிறப்புரையாற்றினார்.

இத்தொழிற்சந்தையில் ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவகம், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, காப்புறுதி நிறுவனங்கள், தயா ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நிறுவனம், பிரதேசமட்ட தனியார் உயர்கல்வி நிறுவனங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்கள் மற்றும் முகாமைத்துவ சேவை நிறுவனங்கள் உட்பட பல்வேறுபட்ட தொழில் வழங்குனர்கள் பங்கேற்றனர்.

ஆலையடிவேம்பு பிரதேசத்தில் பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்த இளைஞர், யுவதிகளில் தொழிற் பயிற்சிகளைத் தொடர விரும்பியோர், காப்புறுதித் துறைகளில் வேலைவாய்ப்புக்களைப் பெற விரும்பியோர், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை எதிர்பார்ப்போர் உட்பட பலதரப்பட்ட மக்களும் இத்தொழிற்சந்தையில் பங்குபற்றி பயன்பெற்றனர்.

## திருவாசக முற்றோதல் நிறைவு

""திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்"" என்பதற்கிணங்க இந்து சமயத்தின் விரதங்களின் சிறப்பான விரதங்களில் ஒன்றான திருவெம்பாவை விரதம் ஆலயங்களில் இடம்பெற்று வருவது சிறப்புமிக்கது அவ்வகையில் முனைக்காடு ஸ்ரீ சித்தி விநாயகர் கண்ணகி அம்மன் ஆலயத்திலும் இவ்விரதம் சிறப்பாக இடம்பெற்றது அதனை சிறப்பிக்கும் முகமாக 2013.12.15ம் திகதி மாணிக்கவாசகர் சுவாமி அவர்களால் அருளி செய்யப்பட்ட திருவாசகம் முற்றும் ஓதுதல் நிகழ்வு இடம்பெற்றது இந்நிகழ்வில் பலர் கலந்து கொண்டனர். (கரன்)





## மட்டக்களப்பு உள்;ராட்சி வாரத்தில் சிவானந்தா மாணவர்கள் கௌரவிப்பு

மட்டக்களப்பு மாநகர சபையினால் 12.12.2013 இன்று நடைபெற்ற உள்ளூராட்சி வாரம் - 2013 இறுதி நிகழ்வு விமர்சையாக மட்டக்களப்பு மாநகர சபை ஆணையார் திரு. மு. சிவநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உள்ளூராட்சி வாரம் மற்றும் தேசிய வாசிப்பு மாதம் தொடர்பாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் ஞாபச்சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் காலநிலை மாற்றம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ போட்டியில் 1ம் இடத்தை பெற்று இதன் மூலம் கொரியாவில் நடைபெற்ற சர்வதேச போட்டியில் உலகளாவிய ரீதியில் 1ம் இடத்தை பெற்றும் Stockholm Junior Water Prize 2013 என்னும் நீர் தொடர்பான பிரச்சனைகளுக்கு புத்தாக்கங்கள் மூலம் தீர்வு காணுதல் போட்டியில் தேசிய ரீதியில் 1ம் இடத்தைப் பெற்று சுவீடன், ஸ்டோக்கோம் மாநகரில் நடைபெற்ற விழாவில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய சிவாநந்தா தேசிய பாடசாலை மாணவன் செல்வன் கிஷோத் நவரெட்ணராஜா மற்றும் Stockholm Junior Water Prize 2013 பங்கு பற்றிய செல்வன். கிஷாந் சாந்தலிங்கம், வித்தியாகரன் நடராஜா ஆகியோரும் மட்டக்களப்பு மாநகர சபை ஆணையார் திரு. மு. சிவநாதன் மற்றும் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி. சுபா சக்கரவர்த்தி அவர்களாலும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.










## மூதூர் பிரதேசசபையின் பாதீடு ஏகமனதாக நிறைவேறியது.

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தினை 2013.11.25 ஆந் திகதி மு.பகல் 10.00 மணிக்கு சபை மண்டபத்தில் நடைபெற்ற அமர்வில் சபையின் தவிசாளர் கௌரவு அகமது முகைதீன் ஹரீஸ் அவர்கள் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கான முன்மொழிவுகளை சமர்பித்து உரையாற்றினார்.

**2014 ஆம் ஆண்டுக்கான புதிய வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ள முக்கியமான வேலைத்திட்டங்களில் சில :**

மிக முக்கியமான 10 இடங்களில் பஸ் தரிப்பு நிலையங்கள் நவீன முறையில் அமைப்பதற்கும், மூதுார, மல்லிகைத்தீவு, தோப்பூர், கட்டைபறிச்சான் ஆகிய பொது நூலகங்களின் சேவையை மேம்படுத்தும் நோக்குடன் நு- டுடைிசயசல திட்டத்தை உருவாக்குவதற்கும், பாலத்தோப்பூர், ஆஸாத்நகர், கங்குவெளி, கட்டைபறிச்சான், ஷாபிநகர் ஆகிய கிராமங்களில் புதிய சிறுவர் பூங்காக்களை அமைப்பதற்கும், மூதூர் மடுவத்தை குரங்குபாஞ்சான் பகுதியில் அமைப்பதற்கும், தற்போது மடுவம் அமைந்துள்ள பகுதியை பெண்கள் ஓய்வெடுக்கும் பூங்காவாக மாற்றுவதற்கும், தோப்பூர் வாராந்த சந்தையை அழகுற அமைப்பதற்கும், தோப்பூர்கடைத் தொகுதியின் மேல்பகுதியை அமைப்பதற்கும், கட்டைபறிச்சான், கிளிவெட்டி நூலகக் கட்டடத்தை திருத்துவதற்கும், சிறப்பாக செயற்படும் சனசமூக நிலையங்களின் நூலகங்களுக்கு தலா ஒரு தினசரிப்பத்திரிகை வழங்குவதற்கும், தாய்சேய் பாரபரிப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், சபையை பொறுப்பேற்று 3 வருட பூர்த்தியை முன்னிட்டு நினைவு மலர் ஒன்றினை வெளியிடுவதற்கும், பிரதேச சபையின் அனைத்து வீதிகளுக்குமான பெயர் பலகை இடுவதற்கும், மூதூர் பிரதேசத்தின் பல பகுதிகளில் வீதி மின்விளக்குகள் பொருத்துவதுடன் மூதூரை அபிவிருத்தியின் மூலம் அழகுபடுத்தும் மேலும் பல திட்டங்களும் ஏனைய அனைத்து பிரதேசங்களுக்குமான பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்களும் உள்ளடங்களான முன்மொழிவுகளும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் அகமது முகைதீன் ஹரீஸ் அவர்கள் தெரிவித்தார். (ஜவாஹிர்)

## மட்டு லியோவின் இரத்தானம்

மட்டக்களப்பு லியே கழக ஏற்பாட்டில் லயன்ஸ் செயல்பாட்டு மையத்தில் இரத்த தான நிகழ்வு 14.12.2013 காலை 9.00 - 12.00 மணி வரை நடைபெற்றது. இதில் 30 க்கும் மேற்பட்ட நன்கொடையாளர்கள் கலந்து கொண்டனர் (ஜோ.அ.ச.கோ)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோரைக் கண்டறியும் ஆணைக் குழுவிடம் தற்போதுவரை 11000 முறைப்பாடுகளே!



காணாமற் போனோரைக் கண்டறியும் சனாதிபதி ஆணைக்குழுவிடம் தற்போதுவரை சுமார் 11,000 முறைப்பாடுகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனால் இம் மாதக் கடைசிவரை காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளப் போவதாக அவ் ஆணைக்குழு அறிவித்துள்ள அதேவேளை அரசும் உத்தயோகபூர்வமான இவ் ஆணைக்குழு முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் நாட்களை 31.12.2013 வரை நீடித்துள்ளது.

இப் பதினொராயிரம் பேரில் முப்படையையும் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை மட்டுமே சுமார் 5,100 ஆக உள்ளது. எஞ்சிய மும்மொழி பேசும் மக்களினது முறைப்பாடுகள் வெறுமனே 5,900 ஆக உள்ளது.

பெரும்பாலான தமிழ் மக்கள் இவ் ஆணைக்குழுவிற்கு அறிக்கையிடுவதைப்பற்றிக் கிஞ்சித்தேனும் சிந்திக்கவில்லை என கிராம சபைத் தலைவர் ஒருவர் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

இவ்வாணைக்குழுவானது தன்னால் திரட்டப்பட்ட தகவல்களை மேல் நடவடிக்கைக்காக அற்ரோணி ஜெனரல் திணைக்களத்திடம் வழங்கவுள்ளது.

அத்திணைக்கள அலுவலர்களே மேல் விசாரணைகளை ஒவ்வொரு காணாமற் போனோர் தொடர்பாகவும் மேற்கொள்வர்.

## "எமக்கும் நியமனம் வழங்குங்கள்"

### வெளிவாரிப் பட்டதாரிகள் வேண்டுகோள்



அண்மையில் கிழக்கில் வழங்கப்பட்ட பட்டதாரி நியமனங்களில் வெளிவாரிப் பட்டப்படிப்பை 2011ம் ஆண்டில் நிறைவு செய்த பட்டதாரிகளைக் கணக்கெடுக்கவில்லை என அம்மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமக்கும் நியமனங்களை வழங்குமாறு கோரிய அவர்களின் மகஜர் ஒன்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தமது நியமனங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அவர்கள்..... 13

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடை செய்ய வேண்டும்

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசு தடை செய்ய வேண்டும். வடக்கில் கூட்டமைப்பு ஆட்சியிலிருக்கும் வரை அங்கிருந்து இராணுவத்தை அகற்றவே கூடாது" எனவும் முன்னால் கடற்படைத் தளபதியும் தற்போதைய பிரதியமைச்சருமான சரத் வீரசேகர நாடாளுமன்றில் கடந்த 18ம் திகதி வலியுறுத்தியுள்ளார்.

புலிகளை அழித்த கையோடு கூட்டமைப்பையும் தடை செய்யாதது தாம் விட்ட தவறு என்றும் முன்னாள் போராளிகளைப் போல் இவர்களையும் கைதுசெய்து புனர்வாழ்வு அளித்திருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற....

தெரிவுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய அவர், பிரபாகரனைத் "தேசிய வீரன்" என கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர் ஒருவர் இந்தச் சபையில் பேசுகின்றார். குறிப்பாக, ஹிட்லர் அழிக்கப்பட்ட பின்னர் நாசி கட்சி தடை செய்யப்பட்டது. எகிப்தில் முபாரக்கின் கட்சியும் தடைசெய்யப்.... 13






## "சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது"

### பொன்.செல்வராசா எம்பி குற்றச்சாட்டு

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் தனது சிறப்புரிமையை மீறியுள்ளதாக மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா அவர்கள் சபாநாயகருக்கு முறைப்பாடொன்றைச் செய்துள்ளார். தனது சிறப்புரிமையை மீறியதற்காக உபவேந்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த 6ம் திகதி நாடாளுமன்றில் உயர்கல்வி

## நாடாளுமன்ற உரையை எதிர்த்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசாவின் நாடாளுமன்ற உரைக்கு கடுமையான எதிர்ப்பலைகள் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் எழுந்துள்ளன.



எந்தவிதமான அடிப்படைச் சான்றுகளையும் சமர்ப்பிக்காமல் நாடாளுமன்ற உறுப்பினர் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பெரும் ஊழல் நடப்பதாக குற்றஞ்சாட்டியிருந்தார். அதனைத் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜா அவர்களால் கூட்டப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பில் "10 ரூபாவைத்தானும் தான் எடுத்திருப்பதை நிரூபித்தால் துணைவேந்தர் பதிவியை விட்டு விலகுவதாக" தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் இன்றுவரை ஊழல் தொடர்பாக எந்தவொரு சான்றாவணத்தையும் பொன். செல்வராசா அவர்கள் ஊடகங்களுக்கோ அல்லது நாடாளுமன்றத்திற்கோ சமர்ப்பிக்கத் தவறியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினரின் குறித்த உரைக்கு எதிராக மாணவர்கள் ஆர்ப்பாட்டமொன்றை 19ம் திகதி முன்னெடுத்ததுடன் துண்டுப் பிரசுரங்களையும் வினியோகித்தனர்.

## "வாரஉரைகல்" ஆசிரியர் அதிரடி நடவடிக்கை



காத்தான்குடியில் இருந்து வெளியாகும் வாராந்தப் பத்திரிகையான "வாரஉரைகல்" பத்திரிகையின் ஆசிரியரால் காவல்துறைக்கு எதிராக மனித உரிமைக் கண்காணிப்பகத்தில் முறையீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காத்தான்குடி காவல்நிலையப் பொறுப்பதிகாரியான அஜித் பிரசன்னாவிற்கு எதிராகவே இந்த முறைப்பாட்டை அப் பத்திரிகையின் ஆசிரியர் புவி. எம்.ஐ றஹ்மத்துழ்ழா மேற்கொண்டுள்ளார்.

கடந்த ஒக்டொபர் மாதம் 30ம் திகதியன்று புவியின் வீட்டிற்கு சாதாரண உடையுடன் மோப்பநாயை அழைத்து வந்த காவ்லதுறையினர் தம்மைக் காத்தான்குடி காவல்துறை அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காட்டியதுடன் ஆசிரியரைக் கஞ்சா வைத்திருந்தார் எனக் குற்றஞ்சாட்டி தடுப்பிலிட்டு விசாரணை செய்ததுடன் நீதிமன்றிலும் நிறுத்தியிருந்தனர். 13



## அரச ஊழியர் ஆக்கத்திறன் போட்டி

## ஜெயகரனுக்கு முதலாம் பரிசு



அரச ஊழியர் ஆக்கத்திறன் போட்டியில் மூதூர் பிரதேசசபையைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி ஜெயகரன் அவர்கள் பாடலாக்கத்திறன் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

அத்துடன் சிதிதரம் வரைதல் போட்டியில் சுகுமார் ராஜரதன் அவர்கள் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார். உள்ளூராட்சி சபைகளுக்கிடையில் நாடளாவிய ரீதியில் நடைடபெற்ற போட்டிகளிலேயே இவர்கள் பரிசில்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கான பரிசில்கள் கடந்த 13.12.2013 அன்று கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் உள்ளூராட்சி அமைச்சரால் வழங்கி வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org